*பாலக்காடு நகருக்குள் புகுந்து*

*வாழை, தென்னை தோப்புகளை சேதப்படுத்திய யானை கூட்டம்*

*பாலக்காடு,மே.11–*
*பாலக்காடு நகருக்குள் யானைக்கூட்டம் புகுந்து தோட்டங்களில் பயிரிடப்பட்டு இருந்த வாழை, தென்னை மரங்களை சேதப்படுத்தின.*
*யானைகள் அட்டகாசம்*
*பொதுவாக கோடை காலத்தில் தண்ணீரை தேடி காட்டு விலங்குகள் ஊருக்குள் படையெடுப்பு வழக்கம்.*
*ஆனால் கடந்த சில ஆண்டுகளாக பாலக்காடு மாவட்டத்தின் மலையோர பகுதிகளான வளையாறு, கஞ்சிக்கோடு, அட்டக்கட்டி பகுதிகளில் யானைகளின் அட்டகாசம் அதிகமாக காணப்பட்டது. இந்த யானைகள் கிராம பகுதிகளில் புகுந்து விவசாய பயிர்களை சேதம் விளைவித்தது.*
*கடந்த சில நாட்களுக்கு முன் மலம்புழா பகுதி அருகே காட்டு யானை புகுந்து மூதாட்டி பெண்ணை மிதித்து கொன்றது. இந்த சம்பவத்தால் அந்த பகுதி மக்கள் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர். உயர் அதிகாரிகள் விரைந்து வந்து சமாதானம் செய்து வைத்தனர்.*
*பாலக்காடு நகரில் நுழைந்தது*
*இந்த நிலையில், பாலக்காடு நகர எல்லையான கொட்டேக்காடு பகுதியில் நேற்று முன்தினம் பட்டப்பகலில் குட்டி யானையுடன் 6 யானைகள் உள்ளே புகுந்தன. யானைகளை பார்த்ததும் ரோட்டில் நடந்து சென்றவர்கள் அலறி அடித்துக் கொண்டு அங்கிருந்து ஓடினார்கள்.*
*இந்த யானைக்கூட்டம் கொட்டேக்காடு நகரின் விவசாய விளை நிலத்தில் புகுந்தது. அங்கு பயிரிடப்பட்டு இருந்த வாழை மரங்கள், தென்னை மரங்கள், காய்கறி தோட்டங்களை பதம் பார்த்தன. யானைகள் வாழை பழங்களை சாப்பிட்டும், வாழைத்தோட்டத்திற்குள் அங்கும், இங்கும் உலாவின.*
*வனத்துறையினர் திண்டாட்டம்*
*யானைகளின் அட்டகாசம் குறித்து வனத்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவல் அறிந்ததும் ரேஞ்ச் அதிகாரி சிபிமாத்யூ தலைமையில் வன அதிகாரி ஜோசப், ஹரிலால் மற்றும் வனத்துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். அங்கு தோட்டத்தில் அட்டகாசம் செய்து கொண்டு இருந்த யானையை விரட்ட பட்டாசுகள் வெடித்தும், தீப்பந்தங்கள் கொளுத்தியும் போராடினார்கள்.*
*ஆனால் யானை அங்கிருந்து நகர மறுத்து விட்டது. பின்னர் வெகுநேரம் கழித்து யானை கூட்டம் காட்டுக்குள் சென்றது. அதன்பின்னரே பொதுமக்கள் நிம்மதி பெருமூச்சு விட்டனர்.*

*சர்வதேச அளவில் தேவை அதிகரிப்பு*

**தேயிலை ஏற்றுமதி 14 சதவீதம் உயர்வு**

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில், நாட்டின் தேயிலை ஏற்றுமதி, ரூபாய் மதிப்பின் அடிப்படையில், முந்தைய நிதி ஆண்டைக் காட்டிலும் 14 சதவீதம் (ரூ.2,381 கோடி) அதிகரித்து ரூ.2,721 கோடியாக உயர்ந்துள்ளது.*
*அளவு அடிப்படையில்...*
*அதேசமயம், தேயிலை ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 5.3 சதவீதம் மட்டுமே உயர்ந்து 19 கோடி கிலோவிலிருந்து 20 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது. இது, இந்திய தேயிலைக்கு சர்வதேச அளவில் நல்ல விலை கிடைத்துள்ளது என்பதை எடுத்துக்காட்டுகிறது. முந்தைய 2008–09–ஆம் நிதி ஆண்டில் சர்வதேச சந்தைகளில் இந்தியாவின் உயர் தரம் வாய்ந்த தேயிலை ரூ.146–க்கு (ஒரு கிலோ) விற்பனை ஆனது. இது, சென்ற நிதி ஆண்டில் ரூ.160–ஆக உயர்ந்தது.*
*இந்நிலையில், உலக அளவில் தேயிலை ஏற்றுமதியில் முன்னிலை வகித்து வரும் இலங்கை மற்றும் கென்யா ஆகிய நாடுகளில் தேயிலை உற்பத்தி குறைந்து, அந்நாடுகளின் ஏற்றுமதியும் சரிவடைந்துள்ளது. இந்தியாவின் தேயிலை ஏற்றுமதி அதிகரித்ததற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம் என்று தேயிலை வாரியத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.*
*பருவநிலை நன்றாக இருந்ததால், தென் மாநிலங்களில் தேயிலை உற்பத்தி உயர்ந்துள்ளது. இதனையடுத்து, சென்ற நிதி ஆண்டில் வட மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா உள்ளிட்ட தென் மாநிலங்கள் தேயிலையை அதிக அளவில் ஏற்றுமதி செய்துள்ளன. இதே நிதி ஆண்டில், தென் மாநிலங்களின் தேயிலை ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 17 சதவீதம் அதிகரித்து 8.43 கோடி கிலோவிலிருந்து 9.84 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது.*
*வட கிழக்கு மாநிலங்கள்*
*அசாம் மற்றும் மேற்கு வங்காளம் உள்ளிட்ட வட கிழக்கு மாநிலங்களில் இதே நிதி ஆண்டில் தேயிலை ஏற்றுமதி 4.7 சதவீதம் சரிவடைந்து 10.60 கோடி கிலோவிலிருந்து 10.10 கோடி கிலோவாக குறைந்துள்ளது.*
*இந்தியா சி.டி.சி. ரக தேயிலையை எகிப்து, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. இவ்வகை தேயிலை ஏற்றுமதியில் இந்தியாவுக்கு கென்யா மற்றும் ஆப்பிரிக்க நாடுகள் போட்டியை ஏற்படுத்தி வருகின்றன. இந்தியா, உயர் தர ஆர்தோடெக்ஸ் தேயிலையை ஈராக், ஈரான், ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. இதன் ஏற்றுமதியில், இலங்கை, இந்தோனேஷியா ஆகிய நாட்டு நிறுவனங்கள், இந்திய நிறுவனங்களுக்கு போட்டியாக அமைந்துள்ளன.*

**சுங்க வரி விதிக்கப்படும் என்ற ஐயப்பாடு காரணமாக**

**தூத்துக்குடி துறைமுகத்தில் கோதுமை இறக்குமதி சரிவு**

*எஸ் சுஜாதா*
*கோயம்புத்தூர்*
*உள்நாட்டில் கோதுமை உற்பத்தி அதிகரித்துள்ளது. கையிருப்பும் அதிகமாக உள்ளது.*

*இந்நிலையில் மத்திய அரசு, கோதுமை இறக்குமதி மீது வரி விதிப்பது குறித்து ஆலோசித்து வருவதாக தெரிகிறது. எனவே தூத்துக்குடி துறைமுகத்தில் கோதுமை இறக்குமதி சரிவடையத் தொடங்கியுள்ளது.*

*ஆஸ்திரேலியா*

*ஆஸ்திரேலியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யும் கோதுமை, பெரும்பாலும் தூத்துக்குடி துறைமுகத்துக்குத்தான் வருகிறது. நடப்பு ஆண்டு ஜனவரி மாதத்தில் இங்கு அதிகபட்சமாக 38,644 டன் கோதுமை வந்திறங்கியது. இது, பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் முறையே 31,993 டன் மற்றும் 28,911 டன்னாக சரிவடைந்தது. இறக்குமதி ஏப்ரல் மாதத்தில் மேலும் சரிவடைந்து 20,352 டன்னாக குறைந்து போயுள்ளது.*

*மத்திய அரசு, சென்ற 2009–ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து கோதுமையை தீர்வை எதுவும் செலுத்தாமல் இறக்குமதி செய்ய நிறுவனங்களுக்கு அனுமதி அளித்தது. இந்நிலையில், கோதுமை இறக்குமதி மீது வரி விதிக்கப்படலாம் என்ற ஐயப்பாடு நிலவி வருகிறது. எனவே, வரி விதிப்பு இல்லை என மத்திய அரசு திட்டவட்டமாக அறிவித்தால் மட்டுமே கோதுமை இறக்குமதி அதிகரிக்கும் என கோவையைச் சேர்ந்த மாவு ஆலை உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார்.*

*உற்பத்தி*

*குளிர்காலப் பயிரான கோதுமை, நம் நாட்டில், நவம்பர் மாதத்தில் விதைக்கப்படுகிறது. மார்ச் 15 முதல் ஏப்ரல் 30 வரையிலான காலத்தில் அறுவடைப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அண்மையில் நிறைவடைந்த பருவத்தில், நம் நாட்டில் கோதுமை உற்பத்தி 8.20 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

*இந்திய உணவுக் கழகத்தின் கோதுமை கொள்முதல் சிறப்பான அளவில் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் எந்த நேரத்திலும் கோதுமை இறக்குமதி மீது வரி விதிக்கப்படும் நிலை உள்ளது. எனவே இறக்குமதியாளர்கள் கவலை அடைந்துள்ளனர்.*

***கூடலூர் பகுதியில் விளைந்துள்ள***

***பாகற்காய் பயிர்களை தாக்கும் பூச்சியால் விவசாயிகள் பாதிப்பு***

*கூடலூர், மே.11–*

*கூடலூர் பகுதியில் விளைந்துள்ள பாகற் காய் பயிர்களை பூச்சி கள் தாக்கி அழித்து வருவதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வரு கின்றனர். இதனால் பிளாஸ்டிக் பைகளை கொண்டு பாகற்காய் களை பாதுகாத்து வருகின்றனர்.*

*பாகற்காய் விளைச்சல் அமோகம்*

*ஊட்டி, குன்னூர், கோத்தகிரி ஆகிய பகுதிகளில் மலை காய்கறிகள் மட்டுமே பயிரிடப் பட்டு அறுவடை செய்யப்படு கின்றன. ஆனால் மாவட்டத்தில் உள்ள கூடலூர், பந்தலூர் பகுதிகளில் மலை காய்கறிகளுடன், சமவெளி பிரதேச காய்கறிகளையும் பயிரிட்டு விவசாயிகள் கணிசமான வருவாயை ஈட்டி வருகின்றனர். ஒவ்வொரு காலநிலை களுக்கு ஏற்ப பயிர்களை பயிரிட்டு அறுவடை செய் வதில் கூடலூர் விவசாயிகள் முதன்மை பெற்று வருகின் றனர். தற்போது கோடை காலமாக இருப்பதால் இக்காலத்தில் வளரக்கூடிய பூசணிக்காய், கத்தரிக்காய், பாகற்காய், முட்டைக்கோஸ், பஜ்ஜி மிளகாய் உள்ளிட்ட பயிர்களை அதிகளவு விவ சாயிகள்*

பயிரிட்டு அறுவடை செய்து வருகின்றனர்.

பாகற்காய்களை தாக்கும் பூச்சிகள்

கூடலூர் பகுதியில் மண்வயல், புத்தூர்வயல், கோத்தர்வயல், ஏழுமரம், 2–வது மைல் மற்றும் பந்தலூர் பகுதிகளில் பாகற்காய் விளைச்சல் அமோகமாக உள்ளது. இதனால் நன்கு விளைந் துள்ள பாகற்காய்களை அறுவடை செய்து கேரளா, மேட்டுப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளுக்கு லாரிகளில் கொண்டு செல்லப்படுகின் றன.

இந்த நிலையில் கூடலூர் பகுதியில் மண்வயல், புத்தூர் வயல் உள்ளிட்ட பரவலான பகுதியில் கொடியில் தொங்கு கின்ற பிஞ்சு பாகற்காய்களை ஒருவகை பூச்சிகள் தாக்கி வருகின்றன. இதனால் காய்களில் துளை ஏற்பட்டு வளர்ச்சி அடையாமல் காய்கள் பழுத்து கிழே உதிர்ந்து வருகின்றன.

இதனை தவிர்க்க குறைந்த அளவு பாகற்காய்களை பயிரிட்டுள்ள விவசாயிகள் கொடிகளில் தொங்கும் பாகற்காய் பிஞ்சுகளை பிளாஸ்டிக் பைகள் கொண்டு நன்கு மூடி பாதுகாத்து வருகின்றனர். ஆனால் ஏக்கர் கணக்கில் பாகற்காய் செடி களை பயிரிட்டுள்ள விவசாயி கள் ஒவ்வொரு காய்களையும் பாதுகாக்க பிளாஸ்டிக் பைகள் கட்டுவது சாத்தியமில்லாதது. இதனால் பாகற்காய் விளைச்சல் பாதிக்கப்பட்டு விவசாயிகள் நஷ்டம் அடைந்து வருகின்றனர்.

விவசாயிகள் பாதிப்பு

கடந்த சில தினங்களுக்கு முன்பு கூடலூர் பகுதியில் சூறாவளி காற்று வீசியதில் வாழை, பாகற்காய் பயிர்கள் அடியோடு நாசமாகின. காற்றின் வேகத்தில் பாகற்காய் கொடிகள் தரையோடு விழுந் ததில் பாகற்காய் பயிரிட்டுள்ள விவசாயிகள் பெரும் பாதிப்பு உள்ளாகினர்.

இந்த நிலையில் பாகற்காயை பூச்சிகள் தாக்கி வருவதால் விவசாயிகள் மேலும் கவலை அடைந்துள்ளனர்.

தினமணி

## கால்வாய், குளங்களை தூர்வார விவசாயிகள் சங்கம் கோரிக்கை

நாகர்கோவில், மே 9: அகஸ்தீஸ்வரம் ஒன்றியத்தில் உள்ள கால்வாய், குளங்களைத் தூர்வாரி பராமரிக்க வேண்டும் என விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து அகஸ்தீஸ்வரம் ஒன்றிய தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் முத்துகுமார், செயலர் எம். பால் உள்ளிட்டோர் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

அகஸ்தீஸ்வரம் ஒன்றியம், பல குளங்களையும், கால்வாய்களையும் கொண்ட விவசாயப் பகுதியாகும். இப்பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் பெரும்பாலான பகுதி வீட்டுமனைகளாக மாறி வருகிறது. மேலும், குளங்களும், கால்வாய்களும் பராமரிக்கப்படாததால்

செடி, கொடிகள் நிறைந்தும், மணல் தூர்ந்தும் கிடக்கிறது.

இதனால் வேகமாகக் குறைந்து வரும் நிலத்தடி நீர் மேலும் குறைவதற்கு வழி வகுக்கும். மேலும், பழையாற்றின் பெரும்பாலான தடுப்பு சட்டர்கள் பழுதடைந்துள்ளது. இதனால் தண்ணீர் வீணாகிக் கடலுக்குள் செல்கிறது. தவிர, நகரப்பகுதிகளில் உள்ள கழிவு நீர், நீர்நிலைகளில் கலப்பதாலும் நிலத்தடி நீர் பாதிக்கப்படும் சூழ்நிலை உள்ளது. எனவே, மாவட்ட நிர்வாகம் குளங்கள், கால்வாய்களைப் பராமரிப்பதோடு, கழிவு நீர், நீர்நிலைகளில் கலப்பதையும் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## எய்ட்ஸ் குறித்து விவரம் அறிய இலவச தொலைபேசி எண்

சென்னை,மே 10: எச்.ஐ.வி. எய்ட்ஸ் நோய் குறித்த சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்க இலவச தொலைபேசி சேவை எண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

யுனைட்டட் ஸ்டேட் ஏஜென்ஸி ஃபார் இன்டர்நேஷனல் டெவலப்மென்ட் மற்றும் பாப்புலேஷன் சர்வீசஸ் இன்டர்நேஷனல் அமைப்புகள் இணைந்து இந்த இலவச தொலைபேசி எண்ணை அறிமுகப்படுத்தியுள்ளன.

பொது மக்கள் எச்.ஐ.வி.-எய்ட்ஸ் குறித்த சந்தேகங்களை 1800 266 0366 என்ற எண்ணில் கேட்கலாம். பயிற்சி பெற்ற ஆலோசகர்களைக் கொண்டு தகவல்கள் மற்றும் பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன.

பொதுமக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டும், அவர்களிடம் உள்ள தவறான கருத்துக்களையும் நீக்கும் நோக்கத்திலும் இந்த சேவை எண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

திங்கள் முதல் சனிக்கிழமை வரை காலை 10 முதல் மாலை 6 மணி வரை இந்த சேவை எண் செயல்படும்.

## மஞ்சள் சாகுபடி அதிகரிப்பு!

கோபி, மே 9: மஞ்சள் விலை 16 ஆயிரம் ரூபாய் வரை உயர்ந்துள்ளதால், கோபி பகுதியில் முதல் போகத்தில் அதிகளவில் மஞ்சள் பயிரிட்டு வருகின்றனர்.

ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையில் இருந்து அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதிகளில் முதல்போகத்துக்காக ஏப்ரல் 15-ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. மொத்தமுள்ள 24 ஆயிரம் ஏக்கரில் அதிகளவில் நெல், கரும்பு, மஞ்சள் பயிரிடப்படுவது வழக்கம். முதல்போகத்தில் பயிரிடக்கூடிய ஏ.எஸ்.டி 16 ரக நெல்லுக்கு ஏற்கெனவே தட்டுப்பாடு உள்ளது. இதனால் விவ

சாயிகள் வேறு ரக விதை நெல்லை வாங்கி நாற்று விட்டுள்ளனர்.

இதனிடையே உற்பத்தி குறைவு, பழைய மஞ்சள் அதிகளவில் விற்பனை மற்றும் அரபு நாடுகள் உள்ளிட்ட வெளிநாட்டுத் தேவை அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் மஞ்சள் விலை குவிண்டாலுக்கு 16 ஆயிரம் ரூபாயை எட்டியது. மேலும் விலை உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், கோபி அரக்கன்கோட்டை தடப்பள்ளி பாசனப் பகுதிகளில் முதல்போக சாகுபடியில் மஞ்சள் பயிரிட விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டிவருகின்றனர். ஆனால் நோய் தாக்காத, பூச்சிகளால் பாதிப்பு ஏற்படாத எட்டாம் நம்பர் ரக மஞ்சள் விதை போதிய அளவில் கிடைப்பதில்லை. இப் பகுதியில் எட்டாம் நம்பர் மஞ்சள்தான் செழிப்பாக வளரும் என்பதால், விவசாயிகள் அதிக விலை கொடுத்து இந்த ரக மஞ்சள் விதையை தேடிப் பிடித்து வாங்குகின்றனர்.

கடந்த ஆண்டு முதல் மற்றும் இரண்டாவது போகத்தின் போது எட்டாம் நம்பர் மஞ்சள் விதை கிலோ 30 ரூபாய் வரை விற்றது.

"மேட்டூர் புதிய மின் நிலையத்தில் அடுத்த ஆண்டு உற்பத்தி துவங்கும்:சி.பி.சிங்

மேட்டூர்,மே 8:  சேலம் மாவட்டம், மேட்டூரில் ரூ.3,100 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் புதிய அனல் மின் நிலையத்தில் 2011-ம் ஆண்டு உற்பத்தி துவங்கப்படும் என்று தமிழ்நாடு மின் வாரியத் தலைவர் சி.பி.சிங் தெரிவித்தார்.

சனிக்கிழமை மேட்டூர் வந்த அவர் மேட்டூர் அனல் மின் நிலையத்தையும், புதியதாக கட்டப்பட்டு வரும் 600 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின்நிலைய பணிகளை பார்வையிட்டார்.

பின்னர், அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

மேட்டூர் அனல் மின் நிலையத்தில் ரூ.3,100 கோடி செலவில் 600 மெகாவாட் திறன் கொண்ட புதிய அனல் மின் நிலையம் கட்டப்பட்டு வருகிறது. இப்போது 47 சதவிகித பணிகள் முடிவடைந்து விட்டன. இத்திட்டம் ஜூன் 2011-ல் இயக்க நிலைக்கு வரும். அதே ஆண்டு செப்டம்பர் மாதம் பயன்பாட்டிற்கு வரும்.

ஆனால் தமிழகத்தின் மின் தேவையை கருத்தில் கொண்டு இரண்டு மாதங்களுக்கு முன்னதாகவே முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புதிய யூனிட்டுக்கு நிலக்கரி ரயில் மூலம் கொண்டு வருவதில் சிக்கல் நீடிக்கிறது.

இம்மாதம் 23-ந் தேதி சென்னையில் அறிக்கை தாக்கல் செய்தவுடன் நிலக்கரி கொண்டு வருவதில் சிக்கல் இருக்காது. மேலும், மேட்டூர் மற்றும் சென்னையில் உள்ள அனல் மின் நிலையங்களில் 10 நாட்களுக்கு போதுமான நிலக்கரியும், தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 20 நாட்களுக்கு தேவையான நிலக்கரியும் இருப்பு உள்ளது.

தமிழகத்தில் 2.12 கோடி மின் நுகர்வோர் உள்ளனர். இதில் 1.42 கோடி இணைப்புகள் வீட்டு மின் இணைப்புகள். 18 லட்சம் பேர் விவசாய மின் இணைப்பு பெற்றவர்கள்.

தேசிய அளவில் 36 சதவிகிதம் மின் இழப்பு ஏற்படுகிறது. தமிழகத்தில் 19 சதவிகிதம் மின் இழப்பு ஏற்படுகிறது. ஆண்டுக்கு 12 லட்சம் புதிய இணைப்புகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. மின் மீட்டர் தட்டுப்பாடு இல்லை என்றார்.

தமிழ்நாடு மின்வாரிய இயக்குனர்(திட்டம்) சுகுமார் சாலமன், இயக்குனர் (கட்டுமானம்) அட்சயகுமார் மற்றும் அனல் மின்நிலைய அதிகாரிகள் உடனிருந்தனர்.

## விவசாயத் தொழிலாளர் மாநாடு: திருவாரூரில் வரவேற்புக் குழுக் கூட்டம்

திருவாரூர், மே 8: அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் அகில இந்திய 7-வது மாநாட்டையொட்டி, வரவேற்புக் குழு அமைப்புக் கூட்டம் திருவாரூரில் நடைபெற்றது.

அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் அகில இந்திய 7-வது மாநாடு திருச்சியில் வரும் ஜூலை மாதம் 17 முதல் 19-ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்த, திருவாரூர் மாவட்ட அளவிலான வரவேற்புக் குழு அமைப்புக் கூட்டம் திருவாரூரில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு மாவட்டத் தலைவர் பி.ஆர். சாமியப்பன் தலைமை வகித்தார். சங்கத்தின் மாநிலத் தலைவர் ஏ. லாசர் பங்கேற்று, மாநாட்டின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் ஐ.வி. நாகராஜன் தலைவராகவும், விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டச் செயலர் ஜெ. நாவலன் செயலராகவும், விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் ஜி. சுந்தரமூர்த்தி பொருளராகவும் கொண்டு, பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட 100 பேரை உள்ளடக்கிய வரவேற்புக் குழு அமைக்கப்பட்டது.

மாநாடு குறித்து கிளைகள் தோறும் விளம்பரங்களை மேற்கொள்ளவும், திருவாரூர் மாவட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 5,000 பேரை பேரணியில் பங்கேற்கச் செய்யவும் ஏற்பாடுகளை மேற்கொள்வது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்க தர மதிப்பீடு

தேனி, மே 9:   தேனி மாவட்ட மகளிர் திட்டம் மூலம் 2010-2011-ம் ஆண்டிற்கு சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி, பொருளாதாரக் கடன் மானியம் மற்றும் சுய தொழில் துவங்க மதிப்பீடு செய்யப்பட உள்ளதாக ஆட்சியர் பூ.முத்துவீரன் தெரிவித்துள்ளார்.

அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் மதிப்பீடு நடைபெறும் விவரம்:

கம்பம், சின்னமனூர், உத்தமபாளையம், போடி, ஆண்டிபட்டி, பெரியகுளம், தேனி, க.மயிலாடும்பாறை ஆகிய 8 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் மே 12, 19, 26 ஆகிய தேதிகளில் மகளிர் குழுக்களுக்கு தரம் மதிப்பீடு செய்யப்பட உள்ளது.

அந்தந்தப் பகுதியைச் சேர்ந்த குழு ஆரம்பித்து 6 மாதங்கள் நிறைவடைந்த சுய உதவிக் குழுக்கள் தங்கள் வங்கிக் கணக்கு, பாஸ் புத்தகம், கணக்குப் பராமரிப்புப் பதிவேடு, குழுக் கூட்டம் நடத்துதல் போன்ற அனைத்துப் பதிவேடுகளுடன் இந்தத் தேர்வில் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொண்டுள்ளார் ஆட்சியர்.

## முருங்கை காய் விலை உயர்வு

வெள்ளக்கோவில்,மே 9: வெள்ளக்கோவில் வாரச் சந்தையில் ஞாயிற்றுக்கிழமை வந்த முருங்கைக் காய்களின் விற்பனை விலை உயர்ந்து காணப்பட்டது.
கடந்த வாரம் ஆயிரம் காய்கள் கொண்ட ஒரு மூட்டை ரூ.200 முதல் ரூ.300 வரை விற்கப்பட்டது. இந்த வாரம் தரத்தைப் பொறுத்து மூட்டை ரூ.600 முதல் ரூ.700 வரை விற்பனையானது. வரத்து குறைவாக இருந்ததால் விலை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.
கிலோ அடிப்படையில் வாரத்தில் சில நாட்கள் விற்பனை நடைபெறும் புதுப்பை, காங்கயம் சாலையிலுள்ள வெள்ளமடையிலும் முருங்கைக் காய் விலை உயர்ந்து காணப்பட்டது.

## பருத்தியில் மாவுப் பூச்சியின் தாக்குதலை கட்டுப்படுத்த யோசனை

காரியாபட்டி, மே 9: பருத்திப் பயிரில் மாவுப் பூச்சிகளின் தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்து விருதுநகர் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை உதவி இயக்குநர் ராஜகோபால் தெரிவித்துள்ளார்.

சமீப காலமாக பருத்திப் பயிர்களில் மாவுப் பூச்சியின் தாக்குதல் மிக அதிக அளவில் காணப்படுகிறது. விருதுநகர் மாவட்டத்தில் பருத்தி, எள், உளுந்து, கத்தரி, வெண்டை மற்றும் பப்பாளி பயிர்களில் இப் பூச்சிகள் அதிக அளவில் சேதத்தை ஏற்படுத்தி வருகின்றன.

தற்போது மாவுப் பூச்சிகள் பயிரின் சாற்றினை உறிஞ்சுவதால், தாக்கப்பட்ட பகுதிகள் மஞ்சள் நிறமாகி பின்னர் வாடி உதிர்ந்து விடும். சில சமயங்களில் பருத்திப் பயிர் முழுவதும் காய்ந்து விடும். இப் பூச்சிகள் கூட்டம், கூட்டமாக பஞ்சு போல அடையாக, இலை மற்றும் தண்டுகளில் ஒட்டிக் கொண்டிருக்கும்.

எறும்பு மற்றும் கட்டெறும்புகளின் நடமாட்டத்தை வைத்து இப் பூச்சிகளின் தாக்குதலை எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

மாவுப் பூச்சிகள் வெளியேற்றும் தேன் போன்ற துளிகளை உண்ண வரும் எறும்புகள், இதனை மற்ற செடிகளுக்கு எடுத்துச் சென்று பரப்பி விடுகின்றன. காற்று மற்றும் மனித நடமாட்டம் மூல

மும் இப் பூச்சிகள் பரவுகின்றன.

பருத்தி அறுவடை முடிந்த பின்னரும், அகற்றப்படாத வெண்டை, கத்தரி பயிர்கள் மூலமும் இப் பூச்சிகள் பரவுகின்றன.

பருத்திப் பயிரில் மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகளைக் கையாள வேண்டும். பருத்தி விதைக்கும் போதே ஒவ்வோர் அரை ஏக்கர் பருத்திப் பயிரை சுற்றிலும் அரண் போன்று 1-1 அடிகள் அகலத்திற்கு நாற்றுச் சோளத்தினை நெருக்கமாக வளர்க்க வேண்டும். தட்டைப் பயிரை வாய்க்கால் ஓரங்களில் பயிரிட வேண்டும். மீதைல் பாரத்தியான் 3 மில்லி அல்லது குளோர் பைரிபாஸ் 5 மில்லி மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்தும் இப்பூச்சியினைக் கட்டுப்படுத்தலாம்.

பயிரின் பாகங்கள் மற்றும் பூச்சியின் மாவுப் படலத்தினுள் மருந்து பரவுவதற்கான திரவ சோப்புகளை ஒரு லிட்டர் மருந்து கரைசலுக்கு அரை மில்லி வீதம் சேர்த்துக் கொள்ள வேண்டும். 10 அல்லது 15 நாட்களுக்கு பின்னர் மீண்டும் மருந்து தெளிக்க வேண்டும். அப்போதுதான் மாவுப்பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த முடியும்.

உயிரியல் கட்டுப்பாடே நீண்ட காலத் தீர்வாக அமையும். பொறி வண்டுகளும், அதன் குஞ்சுகளும் இப் பூச்சிகளை தின்று அழிக்கின்றன. ஆஸ்திரேலிய பொறி வண்டு 300 வண்டுகளை ஒரு ஹெக்டேர் என்ற அளவில் வெளியிட்டு மாவுப் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்.

மேலும் விவரங்களுக்கு அருகில் உள்ள வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயன் பெறலாம் என்று அவர் கூறினார்.

## அறிவியல் இயக்கம் மூலம் கோடை அறிவியல் திருவிழா

புதுக்கோட்டை, மே 9: தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மூலம் குழந்தைகளுக்கான கோடை அறிவியல் திருவிழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

புதுக்கோட்டை நகரக் கிளை சார்பில் மாவட்டம் முழுவதும் 100 இடங்களில் இந்த விழாவை நடத்தத் திட்டமிடப்பட்டதைத் தொடர்ந்து, மாலையீடு முல்லைநகரில் நடைபெற்ற நடைபெற்ற விழாவுக்கு, கிளைத் தலைவர் டி. பழனிமுத்து தலைமை வகித்தார்.

மாநிலப் பொதுச் செயலர் டி.எஸ். பாலகிருஷ்ணன், மாவட்டத் துணைத் தலைவர் பொன்கருப்பையா ஆகியோர் அறிவியல் கண்டுபிடிப்புகளை பல்வேறு சோதனைகள் மூலம் செய்து காண்பித்தனர். இதில் அப்பகுதியைச் சேர்ந்த 60 க்கும் மேல்பட்ட குழந்தைகள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டனர்.

விழாவில், மாவட்ட நிர்வாகிகள் அ. மணவாளன், லெ. பிரபாகரன், சி. சேதுராமன், டி. சிவராமகிருஷ்ணன், சுகதேவ், ஜாஸ்பர் ஆகியோர் பேசினர்.

நகரக் கிளைச் செயலர் கா. ஜெயபாலன் வரவேற்றார். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர். பிச்சைமுத்து நன்றி கூறினார்.

## வேளாண்மை கூட்டுறவு வங்கி பணியாளர் சங்கத்தினர் ஊர்வலம்

திருவண்ணாமலை, மே 10:திருவண்ணாமலையில், தமிழ்நாடு மாநில தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்கத்தினர் 11 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி திங்கள்கிழமை ஊர்வலம் நடத்தினர்.

அங்காடிப் பணியாளர்களுக்கு புதிய ஊதிய நிர்ணயம் செய்ய அமைக்கப்பட்டுள்ள ஊதியக் குழுவிடம் விரைவில் அறிக்கை பெற்று புதிய ஊதியம் அறிவிக்க வேண்டும்.

தற்போது 5 ஆண்டுகள் பணி முடிவடையும் வரை தொகுப்பூதியம் என்பதை மாற்றி அனைவருக்கும் உடனடியாக காலமுறை ஊதியம் வழங்க வேண்டும்.

தகுதியுள்ள அங்காடிப் பணியாளர்கள் அனைவருக்கும் பதவி உயர்வு தர வேண்டும்.

அங்காடி மற்றும் சங்க பணியாளர்களுக்கு மருத்துவ காப்பீடு அமல்படுத்தப்பட வேண்டும்.

அனைத்துப் பணியாளர்களுக்கும் ஓய்வூதியத் திட்டம் அறிமுகம் செய்ய வேண்டும்.

அனைத்து அங்காடிகளுக்கும் மின்னணு ரசீது இயந்திரம் வழங்க வேண்டும்.

ஒரு துறை ஆய்வு மட்டுமே நடத்த வேண்டும். அங்காடிப் பணியாளர்கள் காரணமின்றி தாற்காலிக நீக்கம் செய்வதை கைவிட்டு தவறு செய்தால் மட்டுமே நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது.

ஊர்வலத்துக்கு மாவட்டத் தலைவர் கே.ஜம்புலிங்கம் தலைமை தாங்கினார். செயலாளர் ஜி.பாண்டியன், பொருளாளர் எஸ்.சாரங்கபாணி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

வேங்கிக்கால் மின்வாரிய அலுவலகம் முன் தொடங்கிய ஊர்வலம், வேலூர் சாலை வழியாக ஆட்சியர் அலுவலகத்தை சென்றடைந்தது. சங்க நிர்வாகிகள் ஆட்சியர் ராஜேந்திரனிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

## முட்டை விலை ரூ. 2.50 ஆக உயர்வு

நாமக்கல், மே 9:தமிழக கோழிப் பண்ணை வரலாற்றிலேயே முதன்முறையாக முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை ரூ. 2.50 காசுகளாக உயர்ந்துள்ளது.

÷முட்டை விலையைத் தொடர்ந்து முட்டைக் கோழி மற்றும் கறிக்கோழி விலைகளும் உயர்ந்துள்ளது. தமிழகத்தில் முட்டை உற்பத்திக்கு முன்னோடியாக விளங்குவது நாமக்கல் மாவட்டம்.

முட்டை விலையை நிர்ணயம் செய்ய நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு இயங்கி வருகிறது. முட்டையின் நுகர்வு, பிற மாநில சந்தைகளின் விலை நிலவரம், தமிழகம், கேரளத்துக்கான விற்பனை வாய்ப்பு ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு விலை நிர்ணயம் செய்யப்படுவது வழக்கம். ÷கோழிப் பண்ணை துவங்கி 30 ஆண்டுகளுக்கு மேலாக முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை அதிகபட்சமாக ரூ. 2.48 என்பதே உட்பட்ச விலையாக கருதப்பட்டது.

இந்த விலையும் இந்தாண்டு துவக்கத்திலேயே நிர்ணயம் செய்யப்பட்டது.

÷தற்போது, ரூ. 2.50 காசுகள் என அறிவிக்கப்பட்டிருப்பதே அதிகபட்ச கொள்முதல் விலையாகும். பிற மாநிலங்களில் விலையேற்றம், தமிழகத்தில் தொடர் மழையால் முட்டையின் நுகர்வு அதிகரிப்பு, உற்பத்தி குறைவு ஆகிய காரணங்களால் விலையேற்றம் ஏற்பட்டுள்ளது.

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு ஞாயிற்றுக்கிழமை அறிவித்த விலை ரூ. 2.50 (முந்தைய விலை ரூ. 2.45). முட்டைக் கோழி விலை கிலோ ரூ. 50 (முந்தைய விலை ரூ. 47).

÷ பிற மாநிலங்களில் முட்டை விலை நிலவரம்: ஹைதராபாத்- ரூ. 225, சென்னை- ரூ. 2.55, மைசூர்- ரூ. 2.45, பெங்களூர்- ரூ. 2.45, மும்பை- ரூ. 2.45, புதுதில்லி- ரூ. 2.33, கோல்கத்தா ரூ. 2.60.

÷வழக்கமாக கோடையில் முட்டை விலை சரிந்திருக்கும். வழக்கத்துக்குமாற இந்தாண்டு மட்டுமே முட்டை விலை உட்சபட்சத்தை எட்டியுள்ளது.

## மாணவர்களுக்கு கல்விக்கடன் மீதான வட்டியை மானியமாக வழங்க முடிவு

சிவகங்கை, மே 9: மாணவர்கள் படிக்கும் காலத்தில் வங்கிகளில் பெற்ற கல்விக்கடன் மீதான வட்டியை மானியமாக வழங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சரின் தனிச்செயலர் எம்.ஏ.சித்திக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை:

கல்வி பயிலும் காலத்தில் பயனாளிகள் பெற்ற கல்விக்கடன் மீது வட்டி, அபராத வட்டி கட்ட வங்கிகள் கட்டாயப்படுத்துவதாக மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்துக்கு கல்விக்கடன் பெற்றவர்கள் கடிதம் மூலம் தெரிவித்திருந்தார்கள்.

அதை தொடர்ந்து மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் உத்தரவுக்கு இணங்க நிதிஅமைச்சகத்தை கடிதம் மூலம் தொடர்பு கொண்டோம். அதற்கு அவர்கள் அளித்த பதிலில் பொதுத்துறை வங்கிகளிடமிருந்து பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்கள் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளில் தொழிற்படிப்பு மற்றும் பிற உயர்படிப்பு படிப்பதற்காக வாங்கும் கல்விக்கடனுக்கு உ.யர்படிப்பு படிக்கும் காலத்தில் கல்விக்கடனுக்கான வட்டியை மானியமாக அளிக்க இந்திய வங்கிகளின் சம்மேளனம் பரிந்துரையின் பேரில் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இதற்கான சில விதிமுறைகளை இந்திய வங்கிகளின் சம்மேளனம் வகுத்துள்ளதாகவும் அதன்

அடிப்படையில் மட்டுமே மானியம் வழங்கப்படும் என்றும் 2009-2010-ம் ஆண்டு முதல் நடைமு றைக்கு வருவதாகவும் மத்திய நிதி அமைச்சகத்தின் அலுவலகம் கடிதம் மூலம் தெரிவித்துள்ளது என மத்திய உள்துறை அமைச்சரின் தனிச்செயல்ர எம்.ஏ.சித்திக் தெரிவித்துள்ளார்.

## கால்நடைகளுக்கு இலவச தீவனம் மார்க்சிஸ்ட் கம்யூ. வலியுறுத்தல்

அரூர், மே 10: தருமபுரி மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவுவதால் கால்நடைகளுக்கு இலவசமாக தீவனம் வழங்க வேண்டும் என மார்க்சிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

கட்சியின் பேரவைக் கூட்டம் அரூரில் வட்டக் குழு உறுப்பினர் எஸ்.எம்.கண்ணன் தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது.

மின் பற்றாக்குறையை நீக்க வேண்டும், குடிநீர் தட்டுப்பாடுகளை போக்க தருமபுரி மாவட்டத் துக்கு கூடுதலாக நிதியை ஒதுக்க வேண்டும்.

கோடை காலத்தில் கால்நடைகளை மர்ம நோய்கள் தாக்காமல் தடுக்க இலவச கால்நடை மருத் துவ முகாம்களை மாவட்ட நிர்வாகம் நடத்த வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத் தில் நிறைவேற்றப்
பட்டன.

கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஏ.குமார், மாவட்டக் குழு உறுப்பினர் எஸ்.கே.கோவிந்தன், விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்ட அமைப்புச் செயலர் இ.கே.முருகன், வட்டச் செயலர் கே.என்.ஏழுமலை, ஊராட்சித் தலைவர் எம்.வீரபத்திரன், இந்திய ஜனநாயக வாலிபர் சங்க மாவட்டச் செயலர் எம்.முத்து உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## குவிண்டால் மஞ்சள் ரூ.16 ஆயிரம் வரை விற்பனை!

அரூர், மே 10: அரூரில் குவிண்டால் மஞ்சள் ரூ.16 ஆயிரம் வரையில் விற்பனையானது என வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் தனி அலுவலர் பாலகிருஷ்ணன் தெரிவித் துள்ளார்.

இது குறித்து திங்கள்கிழமை அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

அரூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் வாரந்தோறும் மஞ்சள் ஏலம் நடை பெறுகிறது. கடந்த வாரம் குவிண்டால் விரலி மஞ்சள் ரூ.16,090 வரையிலும் ஏலம் போனது.

அரூரில் நடைபெறும் மஞ்சள் ஏலத்தில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள்

வருகின்றனர்.

ஒவ்வொரு வாரமும் ரூ.500 முதல் ஆயிரம் வரையிலும் மஞ்சள் விலை அதிகரிக்கிறது. மஞ்சள் மூட்டைகளை 3 மாத காலம் பாதுகாப்பு செய்து விற்பனை செய்யும் அளவில் அரூரில் கிடங்கு வசதியுள்ளது.

எனவே தற்போது மஞ்சள் மூட்டைகளுக்கு நல்ல விலை கிடைப்பதால் அரூர், பாப்பிரெட்டிப் பட்டி, மொரப்பூர் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் இந்த வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

**விவசாயிகளுக்கு விதைகலன்**

வாலாஜாபாத் : வாலாஜாபாத் வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில் விவசாயிகளுக்கு மானிய விலையில் விதை சேமிப்பு கலன் வழங்கப்படுகிறது. வாலாஜாபாத்திலிருந்து படப்பை செல்லும் சாலையில் வேளாண்மை விரிவாக்க மையம் அமைந்துள்ளது. இதன் மூலம் விவசாயிகளுக்கு நெல் விதைகள் மற்றும் உரங்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. தற்போது, மையத்தை சுற்றியுள்ள 61 ஊராட்சிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு விவசாய சேமிப்பு கலன் வழங்கப்படுகிறது. இதன் விலை 4 ஆயிரத்து 200 ரூபாய். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு மூன்றில் ஒரு பங்கு கட்டணத் தொகையாக செலுத்தினால் போதும். இதர விவசாயிகளுக்கு 25 சதவீதம் மானிய விலையில் விதை சேமிப்பு கலன் வழங்கப்படுகிறது. சேமிப்பு கலனில் 1000 கிலோ வரை விதைகள் சேமிக்கலாம் என வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பழனிவேலு தெரிவித்தார்.

**பனை மரம் ஏற நவீன கருவி அறிமுகம் கோவை வேளாண் பல்கலை வடிவமைப்பு**

கோவை : தொழிலாளர்கள் பிரச் னைக்கு தீர்வு காண, பனை மரம் ஏற நவீன கருவியை கோவை வேளாண் பல்கலைக்கழகம் உருவாக்கி உள்ளது. கோவை வேளாண் பல்கலையின் பண்ணை இயந்திரவியல் துறை விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ள இந்த

கருவி, பனை ஏறுபவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது. பனை ஏறும் நுட்பம் அறியாத சாதாரண தொழிலாளரும் இதை பயன்படுத்தி எளிதாக மரம் ஏற முடியும்.

வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி இக்கருவி பற்றி கூறியதாவது: நம் நாட்டில் காணப்படும் 86 கோடி பனை மரங்களில் 5.1 கோடி மரங்கள் தமிழகத்தில் உள்ளன. நீரா, பனங்கருப்பட்டி, பனைவெல்லம், ங்கு போன்ற சுவையான மருத்துவ பண்புள்ள உணவுப் பொருட்களை தருவதோடு, அதன் நார் மற்றும் ஓலைப் பகுதிகள் பல பயனுள்ள பொருட்களை தயாரிக்க உதவுகின்றன.சமீபகாலமாக பனை ஏறும் தொழிலாளர்கள் கிடைப்பது அரிதாகி விட்ட காரணத்தாலும், அதிக கூலி கொடுக்க வேண்டியதாலும், பனைத் தொழில் நசிந்து விடும் நிலையில் உள்ளது. இப்பிரச்னைக்கு தீர்வு காணவே இந்த நவீன கருவி வடிவமைக்கப் பட்டுள்ளது. இதை பயன்படுத்தி மரம் ஏறுபவர், மர உச்சியில் மரத்தை சுற்றி, சுற்றி வந்து பணிகளை சுலபமாக செய்ய முடியும். இக்கருவியை மரத்துடன் இணைக்க மூன்று நிமிடமும், ஒரு மீட்டர் உயரம் ஏறி, இறங்க 0.5 நிமிடங்களும் ஆகிறது. ஒரே நாளில் 15 மரங்கள் வரை ஏறி இறங்கலாம். 17 கிலோ எடை கொண்ட இக்கருவிக்கு, ஏணியுடன் சேர்த்து 6,000 ரூபாய் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது, என்றார்.இந்த நவீன கருவியின் செயல் விளக்க நிகழ்ச்சி, கோவை வேளாண் பல்கலையில் நேற்று நடந்தது. தமிழ்நாடு பனை வாரியத் தலைவர் குமரி அனந்தன் கருவியை பார்வையிட்டார்.

**செவ்வழுகல் நோய்க்கு எதிர்ப்பு திறன் கண்டறிய துணைவேந்தர் வேண்டுகோள்**

கோவை : "கரும்பில் செவ்வழுகல் நோய்க்கு எதிர்ப்பு திறன் ரகங்களை கண்டறிய தமிழக அரசு 2.40 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது; இந்நிதியை பயன்படுத்தி விஞ்ஞானிகள் ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும்," என, வேளாண் பல்கலை துணைவேந்தர் பேசினார். தமிழ்நாடு வேளாண் பல்கலையில் கரும்பில் வருடாந்திர ஆராய்ச்சி கூட்டம் நடந்தது. பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி பேசியதாவது:இந்தியாவில் 517 கரும்பு ஆலைகள் உள்ளன; தமிழகத்தில் 37 ஆலைகள் உள்ளன. உலக அளவில் பிரேசிலுக்கு டுத்தபடியாக இந்தியாவில் தான் அதிக கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழகத்தில் 3.6 லட்சம் எக்டரில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது; நாட்டின் மொத்த கரும்பு உற்பத்தியில் 6.9 சதவீதமாகும். 2025ல் இந்தியாவின் மதிப்பிடப்பட்ட வெள்ளை சர்க்கரையின் தேவை 3 கோடி டன். 11

சதவீதம் சர்க்கரை வடித்திறன் அளவில், இந்த இலக்கை எட்ட கரும்பு உற்பத்தி அளவை 45.2 கோடி டன்களாக அதிகரிக்க வேண்டும். தமிழத்தில் சர்க்கரை வடிதிறன் 9.6 சதவீதம் மட்டுமே உள்ளது. இந்திய சர்க்கரை வடித்திறனில் முதலிடத்தில்(11.6 சதவீதம்) உள்ள மகாராஷ்டிராவைவிட குறைவு. தமிழ்நாடு வேளாண் பல்கலை வெளியிட்ட கரும்பு ரகங்களில் 12 சதவீதத்துக்கும் அதிகமான சர்க்கரை வடித்திறன் எடுக்க வாய்ப்புள்ளது. இருப்பினும், வயல் அளவில் 9.6 சதவீதம் மட்டுமே எடுக்கப்படுகிறது. காரணங்களை கண்டறிந்து சர்க்கரை வடித்திறனை அதிகரிக்க மேலாண்மை வழிமுறைகளை விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும். கரும்பு சாகுபடியில் செவ்வழுகல் நோய் மிகப்பெரிய பிரச்னையாக உருவாகியுள்ளது. இதனால், 10 முதல் 12 சதவீதம் வரை மகசூல் குறையும் வாய்ப்புள்ளது.

கரும்பு ஆராய்ச்சிக்கும், செவ்வழுகல் நோய்க்கு எதிர்ப்பு திறன் கொண்ட ரகங்களை கண்டுபிடித்து வெளியிட, தமிழக அரசு 'செஸ் நிதி திட்டத்தில்' 2.40 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. இந்நிதியை பயன்படுத்தி விஞ்ஞானிகள் விரைவாக செவ்வழுகல் நோய்க்கு எதிர்ப்பு திறன் கொண்ட ரகங்களை கண்டறிய வேண்டும்.

கரும்பு மகசூலை எக்டேருக்கு 140 டன் என்றளவில் அதிகரிக்க வேண்டும். அதிநவீன தொழில்நுட்பங்களான கரும்பில் குழி நடவுமுறை, துல்லிய பண்ணையத் தொழில்நுட்பம் மூலம் சொட்டுநீர் மற்றும் கரையும் <உரப்பாசனம் அளித்தல், அதிகளவில் இடைவெளி நடவு முறை ஆகியவற்றை பல்கலை வெளியிட்டுள்ளது. நெல்லில் செம்மை நெல் சாகுபடி போல், கரும்பில் செம்மை கரும்பு சாகுபடி தொழில்நுட்பத்தை பல்கலை தமிழகத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது. இவ்வாறு, துணைவேந்தர் முருகேசபூபதி பேசினார்.

பல்கலை ஆராய்ச்சி இயக்குனர் பரமாத்மா கூறியதாவது: இந்தியாவில் ஐந்து கோடி விவசாயிகள் கரும்பு சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்; அதிகளவில் தொழிலாளர்களும் உள்ளனர். கிராம அளவில் 7.5 சதவீதம் மக்களுக்கு கரும்பு வாழ்வாதாரமாக உள்ளது. தமிழகத்தில் சர்க்கரை வடித்திறன் மிக குறைவாக உள்ளது. இதை அதிகரிக்க பல்துறை விஞ்ஞானிகள் அடங்கிய பணிக்குழு பல்கலை சார்பில் அமைக்கப்படும். இக்குழு

சர்க்கரை வடித்திறனை அதிகரிக்கவும், கரும்பு உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் தேவையான மேலாண்மை முறைகளையும், தொழில்நுட்பங்களையும் ஆராய்ந்து விவசாயிகளுக்கு தெரியப்படுத்தும் வகையில் செயல்படும். இவ்வாறு, அவர் தெரிவித்தார். வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு மைய இயக்குனர் அஜ்ஜன், 'தமிழகத்தில் கரும்பின் பொருளாதாரம்' என்ற தலைப்பில் பேசினார். கூட்டத்தில், கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலைய தலைவர் நசீர் அகமது உள்ளிட்ட கரும்பு ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அறுபது பல்கலை விஞ்ஞானிகள் பங்கேற்றனர். 2009 - 10ல் கரும்பில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள், அதன் முடிவுகள் குறித்தும், வரும் ஆண்டுக்கான ஆராய்ச்சி பணிகளை திட்டமிடுதல் குறித்தும் கலந்துரையாடினர்

**தேங்காய் கொள்முதலை துவக்க முதல்வருக்கு கோரிக்கை**

பொள்ளாச்சி : தமிழகத்தில் நேரடி தேங்காய் கொள்முதலை உடனடியாக துவங்கி, தென்னை விவ சாயிகளை காப்பாற்ற வேண்டுமென்று பாலாறு படுகை திட்டக்குழு தலைவர், முதல்வருக்கு மனு அனுப்பியுள்ளார்.

பி.ஏ.பி., பாலாறு படுகை திட்டக்குழு தலைவர் பரமசிவம், தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள மனு :தமிழகத்தில் தென்னை விவசாயிகள் பெரும்பாலும் கொப் பரை உ<ற்பத்தி செய் வதில்லை. உற்பத்தி யாகும் தேங்காயை வியாபாரிகளுக்கு விற்பனை செய்கின் றனர். இந்நிலையில் மத்திய அரசு கொப் பரைக்கு கொடுக்கும் ஆதரவு விலையால் விவசாயிகளுக்கு எந்த பயனும் கிடைப் பதில்லை. அதற்கு பதிலாக தென்னை விவசாயி களுக்கு மத்திய, மாநில அரசுகள் நேரடியாக மானியம் வழங்க வேண்டும் ன்று பிரதமரிடம் மனு கொடுக்கப்பட்டது. மனு மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, மத்திய வேளாண் துறை சார்பில் விளக்கம் கொடுக்கப் பட்டது. அதில், கொப்பரைக்கு மத்திய அரசு வழங்கும் மானியத்தை விவ சாயிகளுக்கு நேரடியாக வழங்க இயலாது. அதற்கு பதிலாக உரித்த தேங்காய் டன் ஒன்றுக்கு 12 ஆயிரம் ரூபாய் வீதம் கொள்முதல் செய்ய உத்தரவு பிறப்பித்துள்ள தாக கூறப்பட்டுள் ளது.விவசாயிகளிடம் இருந்து நேரடியாக தேங்காய் கொள்முதல் செய்ய மத்திய அரசு உத்தரவிட்டும் கொள்முதல் துவங்க வில்லை. அதனால் மத்திய அரசின் உத்தரவுப்படி தமிழகத்தில் தேங்காய் டன்னுக்கு 12 ஆயிரம் ரூபாய் வீதம் கொள்முதல் செய்து தென்னை விவசாயிகளை காப்பாற்ற வேண்டும். இவ்வாறு, மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பூத்துக்குலுங்கும் புதிய ரக 'எள்' சிறுபாக்கம் விவசாயிகள் மகிழ்ச்சி**

சிறுபாக்கம் : சிறுபாக்கம், வேப்பூர் பகுதிகளில் பூத்துக் குலுங்கும் புதிய ரக எள் சாகுபடியால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.சிறுபாக்கம் மற்றும் வேப்பூரைச் சுற்றியுள்ள கிராமங்களான சேப்பாக் கம், நல்லூர், பெரியநெசலூர், காட்டுமயிலூர், கழுதூர், அடரி உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட நீர்ப்பாசன விவசாயிகள் தங்கள் விளை நிலங்களில் கடந்த ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் கரும்பு, மரவள்ளி அறுவடை செய்தனர்.

பின்னர் குறைவான நீரைக்கொண்டு புதிய ரக 'எள்' பயிரான திண்டிவனம் 4, திண்டிவனம் 2, வெள்ளை எள் ஆகியவற்றை பயிரிட்டனர்.கடந்த ஆண்டு 80 கிலோ எள் மூட்டை ஒன்று சேலம் மாவட்டம் கொளத்தூர் மார்க்கெட்டில் அதிகபட்சமாக 5 ஆயிரம் வரை விற்பனையானது. தற்போது விவசாயிகள் விதைத் துள்ள 'எள்' பயிர் ஏக்கருக்கு 5 முதல் 8 மூட்டைகள் வரை மகசூல் கிடைக்கும். பூக்கள் பூத்துக் குலுங் கிய எள் பயிரால் நல்ல விலை கிடைக்குமென விவசாயிகள் மகிழ்ச் சியில் உள்ளனர்.

---

**சூறாவளியிலிருந்து வாழையை காப்பாற்ற குச்சிகளுக்கு பதில் கயிறு கட்டும் பணி தீவிரம்**

---

கடலூர் : சூறாவளிக் காற்றில் இருந்து வாழையை காப் பாற்ற புதிய முறையில் கயிறு கட்டும் பணி நடந்து வருகிறது.கடலூர் ராமாபுரம், வழிசோதனைப்பாளையம், நெல்லிக்குப்பம், தொட்டி, பில்லாளி உள்ளிட்ட பகுதிகளில் வாழை பெருமளவில் பயிர் செய்யப்படுகிறது. கோடை காலத்தில் திடீரென வீசும் சூறாவளிக் காற்றால் குலை தள்ளும் பருவத்தில் உள்ள வாழைகள் முழுவதும் ஒடிந்து நாசமாகி விவசாயிகளை நஷ்டமாக்கிவிடும். இதற்காக ஒவ்வொரு வாழைக்கும் காற்றில் சாயாதபடி சவுக்கு மரத்தால் முட்டுக் கொடுப்பது வழக்கம்.இதற்காக வாழை விவசாயிகள் பெரும் தொகை செலவு செய்ய வேண்டியுள்ளது. இவ்வாறு செய் வதால் இயற்கை சீற்றத்தில் இருந்து ஓரளவு வாழையை காப்பாற்றலாம். குச்சிகள் மூலம் முட்டுக்கொடுப்பதற்கு ஒரு ஏக்கர் ஒன்றுக்கு 25 ஆயிரம் ரூபாய் செலவு ஆகிறது. தற்போது புதிய யுத்தியின் மூலம் நைலான் கயிற்றினால் வாழை மரத்தை அசையாமல் கட்டிவிட்டால் சூறாவளி காற்றில் இருந்து காப்பாற்ற முடியும் என விவசாயிகள் நம்புகின்றனர். இது சவுக்கு மரத்தை விட குறைந்த செலவில் செய்து விடுவதால் வாழை விவசாயிகள் கயிறு கட்டுவது சிறந்தது என கருதுகின்றனர்.

---

**நெல்லுக்கு குறைந்த விலை கோரும் வியாபாரிகள் களத்திலேயே காத்திருக்கும் விவசாயிகள்**

ஈரோடு: ஈரோடு காலிங்கராயன் கால்வாய் நெல் அறுவடை முடிந்த போதும், தனியார் மிகவும் குறைந்த விலை கோருவதால் களத்திலேயே குவித்து வைத்துள்ளனர். காலிங்கராயன் கால்வாய் பாசனத்தில் ஈரோடு அருகேயுள்ள பி.பி.அக்ரஹாரம், வைராபாளையம், கருங்கல்பாளையம் பகுதியில் ஆண்டு தோறும் நெல் சாகுபடி செய்வது வழக்கம். இப்பகுதியில் சராசரியாக ஆண்டு தோறும் 5,000 முதல் 7,000 ஏக்கர் வரை நெல் சாகுபடி செய்யப்படுகிறது. காலிங்கராயன் கால்வாயில் பராமரிப்பு பணி மேற்கொள்ள ஏதுவாக மார்ச் 15ம் தேதி தண்ணீர் நிறுத்தப்படும் என மாவட்ட நிர்வாகம் அறிவித்தது. அப்போது நெற்பயிர் கதிர்விடும் பருவத்தில் இருந்ததால், நீர் திறப்பை நீட்டிக்க கோரினர். இதையேற்று மார்ச் 7ம் தேதி வரை தண்ணீர் திறப்பு நீட்டிக்கப்பட்டது. ஆனால், ஈரோடு வைராபாளையம் பகுதியில் தாமதமாக நெல் சாகுபடி செய்த வயல்களில் நெல் கதிர் பிடிக்காமல் பதராக கணப்பட்டது. இருப்பினும் சென்ற மாதம் கடைசியில் விவசாயிகள் அறுவடைப் பணியை துவக்கினர். ஈரோட்டுக்கு அருகே நெல் கொள்முதல் நிலையம் இல்லாததால், இப்பகுதி சிறு விவசாயிகள் தனியாரிடமே நெல் விற்பனை செய்வது வழக்கம். 15 கி.மீ.,க்கு அப்பால் பவானி, எழுமாத்தூரில் உள்ள அரசு நெல் கொள்முதல் நிலையங்களுக்கு வாகனங்களில் எடுத்து சென்றால், வாகனச் செலவு கட்டுப்படியாவதில்லை. அரசு நெல் கொள்முதல் நிலையங்களில், ஒரு குவிண்டால் மோட்டா ரக நெல்லுக்கு 1,050 ரூபாய், சன்ன ரக நெல்லுக்கு 1100 ரூபாய் வழங்கப்படுகிறது. ஆனால், தனியார் வியாபாரிகள், 800 ரூபாயிலிருந்து 900 ரூபாய் வரையே விலை கூறுகின்றனர். ஏற்கனவே தண்ணீர் நிறுத்தப்பட்டதால், உற்பத்தி பாதிக்கப்பட்டு நஷ்டமடைந்துள்ள விவசாயிகள், குறைந்த விலைக்கு வியாபாரிகள் கேட்பதால், களத்திலேயே நெல்லை குவித்துவைத்து, பாதுகாப்புக்காக காவல் இருந்து வருகின்றனர்.

வைராபாளையத்தை சேர்ந்த விவசாயி ராஜா கூறியதாவது: நான் நான்கு ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து ஆந்திரா பொன்னி ரகமான பிபி4 ரகத்தை சாகுபடி செய்தேன். முன்னதாகவே தண்ணீர் நிறுத்தப்பட்டதால், நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டதுடன், நெல் போதிய விளைச்சல் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளது.

வழக்கமாக ஒரு ஏக்கருக்கு 65 மூட்டை வரை உற்பத்தி இருக்கும். போதிய விளைச்சல் இல்லாததால், 55 மூட்டை வரைதான் கிடைத்தது. முன்னதாகவே தண்ணீர் நிறுத்தப்பட்டதால், போதிய விளைச்சல் இல்லை என காரணம் கூறி தனியார் வியாபாரிகள் குறைந்த விலைக்கு கேட்கின்றனர். அரசு கொள்முதல் நிலையங்களுக்கு வாகனங்களில் நெல்லை எடுத்து சென்றால் மேலும் நஷ்டம் ஏற்படும். இதனால், தனியார் வியாபாரிகள் கூடுதல் விலை தருவரா என எதிர்பார்த்து காத்திருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

**மாம்பழம் வரத்து 50 சதம் சரிவு ஈரோட்டில் விலை பல மடங்கு உயர்ந்தது**

ஈரோடு: ஈரோடு மார்க்கெட்டுக்கு நடப்பாண்டு மாம்பழம் வரத்து 50 சதவீதம் குறைந்ததால் விலை பல மடங்கு உயர்ந்தது. ஈரோடு நேதாஜி மார்க்கெட் பின்புறம் பழ மார்க்கெட் செயல்படுகிறது. 150க்கும் மேற்பட்ட மொத்த யாபாரக் கடைகள் உள்ளது. ஆப்பிள், சாத்துக்குடி, சப்போட்டா, திராச்சை, அன்னாச்சி, பலாப்பழம் உள்பட அனைத்து வகை பழங்களும், இங்கிருந்து மாவட்டம் முழுவதும் 'சப்ளை' செய்யப்படுகிறது. நகர் முழுவதும் உள்ள சில்லரை விற்பனையாளர்கள், தள்ளு வண்டிக்காரர்கள் வாங்கிச் செல்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் இறுதியில் இருந்து ஜூன் வரை மாம்பழம், பலாப்பழம் வரத்து அதிகம் இருக்கும். சில வாரங்களாக ஈரோடு மார்க்கெட்டுக்கு பழங்கள் வரத்து மிகவும் குறைந்தளவே உள்ளது. பழங்கள் வரத்து குறைவால் விலை பல மடங்கு உயர்ந்துள்ளது. பலாப்பழம் வரத்து ஓரளவுக்கு நன்றாக இருந்தாலும், மாம்பழம் வரத்து மிகவும் குறைந்து விட்டது. சென்றாண்டில் செந்துரா, நடுசாலை கிலோ 20 ரூபாய், சேலம் குண்டு, பங்கனப்பள்ளி 35 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நடப்பாண்டு மாம்பழம் வரத்து குறைவு காரணமாக குண்டு ஒரு கிலோ 60 ரூபாய், செந்தூரா ஒரு கிலோ 30 ரூபாய், பங்கனப்பள்ளி ஒரு கிலோ 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. நடுசாலை, குண்டு உள்ளிட்ட மாம்பழம் வரத்து மிகவும் குறைவாக உள்ளது.
வியாபாரி ஒருவர் கூறியதாவது: ஈரோடு பழ மார்க்கெட்டுக்கு தர்மபுரி, கிருஷ்ணகிரி, தேன்கனிக்கோட்டை மற்றும் ஆந்திரா பகுதியில் இருந்து மாம்பழம் வரத்தாகிறது. மாம்பழம் விளைச்சல் குறைந்ததால், 50 சதவீதம் வரத்து குறைந்துள்ளது. விலையும் பல மடங்கு உயர்ந்துள்ளது. 10 லோடு மாம்பழம் வரத்தாகும் சீஸன் நேரமான இந்நேரத்தில், இரண்டு, மூன்று லோடு மட்டுமே வரத்தாகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**கூட்டுறவு பயிர்க்கடன் ரூ. 170 கோடி இலக்கு**

ஈரோடு: "ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் 170 கோடி ரூபாய் பயிர்க்கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது," என மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் லோகநாதன் பேசினார். ஈரோடு மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் சார்பில் கொடுமுடி அருகே கொளத்துப்பாளையம் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் இலவச கண் பரிசோதனை முகாம் மற்றும் உறுப்பினர் கல்வித் திட்ட முகாம் நடந்தது. மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் லோகநாதன் பேசியதாவது: மத்திய கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ள 225 தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலம் நடப்பு 2010-11ம் ஆண்டுக்கு விவசாயிகளுக்கு பயிர்க் கடனாக 170 கோடி ரூபாய் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு 125 கோடி ரூபாய் பயிர்கடன் வழங்க திட்டமிட்டதில் இலக்கை மிஞ்சி 149.20 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. நகையீட்டின் பேரில் பயிர்க்கடனாக 12 ஆயிரத்து 15 விவசாயிகளுக்கு 60.18 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. விவசாயிகளுக்கு தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் வழங்கப்படும் பயிர்க் கடன்களுக்கு ஏழு சதவீத வட்டி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பயிர்க்கடனை உரிய தவணைத் தேதிக்கு முன் அல்லது தவணைத் தேதியில் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டி இல்லை என அரசு அறிவித்துள்ளது. அரசு ஏழு சதவீத தொகையை துவக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு வழங்கி விடும். எனவே, விவசாயிகள் வாங்கும் கடனை உரிய காலத்துக்குள் பயன்டுத்தி, அதிக மகசூல் பெற்று உரிய தவணைத் தேதியில் செலுத்தி வட்டி சலுகை பெற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். மத்திய கூட்டுறவு வங்கி பொது மேலாளர் இளங்கோ முன்னிலை வகித்தார். ஒன்றிய தனி அலுவலர் சோமகாந்தன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**மஞ்சள் மார்க்கெட்டில் 7 நாளில் ரூ. 1,150 சரிவு**

ஈரோடு: ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் ஏழு நாட்களில் குவிண்டாலுக்கு 1150 ரூபாய் வரை மஞ்சள் வீழ்ச்சி அடைந்துள்ளது. ஏப்ரல் 30ம் தேதி விரலி ஒரு குவிண்டால் 14 ஆயிரத்து 416 ரூபாய், கிழங்கு ஒரு குவிண்டால் 14 ஆயிரத்து 559 ரூபாய்க்கு விற்றது. மே 3ம் தேதி விரலி 16 ஆயிரத்து 469 ரூபாய், கிழங்கு 15 ஆயிரத்து 550 ரூபாய்க்கு

உயர்ந்தது. அதைத்தொடர்ந்து மஞ்சள் விலை சற்று குறைந்து மே 6ம் தேதி விரலி 15 ஆயிரத்து 600 ரூபாய், கிழங்கு 15 ஆயிரத்து 266 ரூபாய்க்கு விற்றது. சனி, ஞாயிறு விடுமுறை பின் நேற்று மீண்டும் மஞ்சள் மார்க்கெட் துவங்கியது. சராசரியாக குவிண்டாலுக்கு 350 ரூபாய் வரை குறைத்தே ஏலம் கோரப்பட்டது. கடந்த ஒரு வாரத்தில் மஞ்சள் விலை 1,150 ரூபாய் வரை குறைந்துள்ளது. நேற்றைய நிலவரப்படி ஒழுங்கு விற்பனைக் கூடத்தில் விரலி 15 ஆயிரத்து 19 ரூபாய், கிழங்கு 14 ஆயிரத்து 903 ரூபாய்க்கு ஏலம் கோரப்பட்டது. 1,518 மூட்டைகள் வரத்தானதில், 1260 மூட்டைகள் விற்பனையானது.
வெளிமார்க்கெட்டில் விரலி 15 ஆயிரத்து 189 ரூபாய், கிழங்கு 15 ஆயிரத்து 16 ரூபாய்க்கு விற்பனையானது. 3,612 மூட்டைகள் வரத்தானதில் 300 மூட்டைகள் மட்டுமே விற்பனையானது. ஈரோடு சொசைட்டியில் விரலி மஞ்சள் 15 ஆயிரத்து 120 ரூபாய், கிழங்கு மஞ்சள் 15 ஆயிரத்து 27 ரூபாய்க்கு விற்பனையானது. 1,116 மூட்டைகள் வரத்தானதில் 995 மூட்டைகள் விற்பனையானது. கோபி சொசைட்டியில் விரலி மஞ்சள் 15 ஆயிரத்து 316 ரூபாய்க்கும், கிழங்கு மஞ்சள் 15 ஆயிரத்து 107 ரூபாய்க்கும் விற்பனையானது. 344 மூட்டைகள் வரத்தானதில் 324 மூட்டைகள் விற்பனையானது.

**வீசியது சூறைக்காற்றுவிழுந்தது வாழை மரங்கள்**

தக்கலை: குமரியில் நெடுநாட்களாக கொளுத்திய கடும் வெயிலின் வேகத்தை தணிக்க வந்த கோடை மழை பொதுமக்களை ஆனந்தப்படுத்தினாலும் சில இடங்களில் விவசாயிகளை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.குமரி மாவட்டத்தில் ஒவ்வொரு இடமாக நாள் குறித்து ஒருவார காலமாக பெய்துவரும் மழை இரண்டு தினங்களுக்கு முன் காட்டாத்துறை பகுதியில் பெய்தது. மழை மட்டும் என்றால் பரவாயில்லை. கூடவே காற்றையும் அழைத்து வந்தது வினையாகி போனது.மெல்ல வந்த காற்று ஆக்ரோஷமாகி சூறைக்காற்றாக மாறியதால் காட்டாத்துறை பூவன்விளையில் தேவராஜ் என்பவரின் தோட்டத்தில் நின்ற சுமார் 200 ரப்பர் மரங்கள் முறிந்தது.

இதுபோல் கண்ணனூர் கொல்லன்கிளாவற வயலில் சுமார் 10 ஏக்கர் நிலத்தில் நடப்பட்டிருந்த நேத்திரன் வாழை, செவ்வாழைகள் மற்றும் சுமார் 2 ஆயிரம் மரங்களை சூறைக்காற்று சுழற்றி, சுழற்றி தாக்கியதில் நிலைகுலைந்து பொதி தள்ளிய குலைகளோடு மண்ணில் சாய்ந்தது.சில மணி நேரம் ருத்ரதாண்டவம் ஆடிய

சூறைக்காற்றுடன் கூடிய மழையால் சுமார் 5 லட்சம் ரூபாய் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. நிலத்தை குத்தகைக்கு எடுத்து வாழை பயிர் செய்துவரும் விவசாயிகள் இதுபோல் இயற்கையினால் வரும் இழப்புகளுக்கு அரசு உதவி என்பது மிக, மிக குறைவாகத்தான் உள்ளது.சில நேரங்களில் கண்டுகொள்வதே இல்லை என பெரும்பாலான விவசாயிகள் கூறுகின்றனர். இவர்களின் நியாயமான கவலைக்கு அரசு செவிசாய்த்தால் கடன் தொல்லையில் தற்கொலை செய்து கொள்வதையாவது தடுக்கலாம்.

**விவசாயிகள் போர்வையில் வியாபாரிகள் : ஓசூர் உழவர் சந்தையில் தொடரும் அவலம்**

ஓசூர்: ஓசூர் உழவர்சந்தையில் விவசாயிகள் போர்வையில் வியாபாரிகள் காய்கறிகள் விற்பனை செய்வதால், வாடிக்கையாளர்களுக்கு நியாயமான விலையில் பொருட்கள் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. ஓசூர் தாலுகா விவசாயிகள், பொதுமக்கள் பயனடையும் வகையில் ஓசூர் தாசில்தார் ஆஃபீஸ் அருகே உழவர்சந்தை செயல்படுகிறது.

ஓசூர், சூளகிரி, பாகலூர், பேரிகை மற்றும் கெலமங்கலம் உள்ளிட்ட பல்வேறு சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து விவசாயிகள் தினம் பஸ்கள், இரு சக்கர வானகங்கள் மூலம் காய்கறிளை பறித்து உழவர்சந்தையில் விற்பனை செய்கின்றனர். இதன் மூலம் தினம் சராசரியாக மூன்று லட்சம் ரூபாய்க்கு வர்த்தக சூழற்சி நடக்கிறது. பண்டிகை நாட்கள், சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் 150 டன்னுக்கு மேல் காய்கறிகள் விற்பனைக்கு வருகிறது. உழவர்சந்தையில் காய்கறிகள் வரத்து மற்றும் அவற்றின் தரத்துக்கு தகுந்தவாறு நியாயமான விலையில் பிரஷ் காய்கறிகள் விற்பனை செய்யப்படுவதால் பொதுமக்கள் வருகையும் நாளுக்கு அதிகரித்து வருகிறது. கடந்த காலத்தில் விவசாயிகள் போர்வையில் வியாபாரிகள் உழவர்சந்தையில் புகுந்து காய்கறிகளை விற்பனை செய்வது அதிகமாக இருந்தது. மாவட்ட வேளாண் அதிகாரிகளின் திடீர் ஆய்வு உள்ளிட்ட நடவடிக்கையால் வியாபாரிகள் நடமாட்டம் குறைந்தது. சமீப காலமாக மீண்டும் உழவர்சந்தையில் வியாபாரிகள் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. பொதுவாக விவசாயிகள் உழவர்சந்தைக்கு தங்களுடைய சொந்த நிலத்தில் உற்பத்தியாகும் காய்கறிகளை மட்டுமே விற்பனைக்கு கொண்டு வர வேண்டும் என்ற விதிமுறை உள்ளது.

ஆனால், உழவர்சந்தையில் காய்கறிகளை விற்பனை செய்யும் போலி விவசாயிகள் 50 சதவீதம் பேர், விளைநிலத்தில் காய்கறிகளை எதுவும் உற்பத்தி செய்யாத நிலையில் தினம் காய்கறிகளை விற்பனைக்கு விவசாயிகளிடம் விலைக்கு வாங்கி வருகின்றனர். இதே போல், வியாபாரிகளும் விவசாயிகளிடம் இருந்து காய்கறிகளை விற்பனைக்கு வாங்கி  உழவர்சந்தையில் விற்பனை செய்கின்றனர்.
உழவர் சந்தை அதிகாரிகள் அவ்வப்போது போலி விவசாயிகளை கண்டறிந்து நடவடிக்கை எடுத்தாலும், அவர்களுடைய  பின்னனியில் செயல்படும் அரசியல்பலம் மற்றும் ரவுடிகள் ஆதிக்கத்தால் வியாபாரிகளை முழுமையாக ஒழிக்க முடியவில்லை. தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் தலைமையில் அதிகாரிகள் குழு, விவசாயிகள் நிலத்தில் அவ்வப்போது திடீர் ஆய்வு செய்து, அவர்கள் உழவர்சந்தைக்கு கொண்டு காய்கறிகளைதான் விற்பனை செய்கிறார்களா? என விசாரணை செய்ய வேண்டும். இல்லாதப்பட்சத்தில் அந்த விவசாயிகளின் உழவர்சந்தை அடையாள அட்டைகளை பறிமுதல் செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.  கடந்த ஒரு ஆண்டாக அதிகாரிகள் குழு விவசாயிகள் நிலத்தில் சென்று  ஆய்வு செய்வதில் மெத்தனபோக்கை கடைபிடித்து வருகின்றனர்.  இதனால், உழவர்சந்தையில் விவசாயிகள் போர்வையில் போலி விவசாயிகள், வியாபாரிகள் நடமாட்டம் அட்டகாசம் அதிகமாகி வருவதால், பொதுமக்களுக்கு  நியாமான விலையில் காய்கறிகள் கிடைப்பது கேள்விகுறியாகி உள்ளது.

**மானாவாரியில் எள் சாகுபடி : வேளாண் அதிகாரி அறிவுரை**

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மானாவாரியில் எள் சாகுபடி செய்து விவசாயிகள் அதிக லாபம் பெறலாம், " என்று வேளாண்மை இணை இயக்குனர் ராஜன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது கோடை மழை பரவலாக பெய்து வருகிறது. மானாவரி எள் சாகுபடி செய்ய நல்ல தருணமாக உள்ளது. விவசாயிகள் விஞ்ஞான தொழில் நுட்பங்களை முழுமையாக கடைப்பிடித்தால் அதிக மகசூல் பெறலாம். தற்போது எள்ளில் ஏக்கருக்கு சராசரியாக 125 லிருந்து 140 கிலோ மகசூல் தான் பெறப்படுகிறது. வேளாண்துறையால்  பரிந்துரைக்கப்படும்  தொழில் நுட்பங்களை விவசாயிகள் பின்பற்றினால் ஏக்கருக்கு 225 கிலோவில் இருந்து 250 கிலோ வரை மகசூல் எளிதாக பெறலாம். ஒரு கிலோ எள் 40 ரூபாய் என்று கணக்கில் கொண்டால் கூட ஏக்கருக்கு 9 ஆயிரம் ரூபாய் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை மூன்று மாதங்களில்

பெறலாம். ஏக்கருக்கு 2 கிலோ வீதம் டிஎம்வி3, விஆர்ஐ1, மற்றும் கோ1 ஆகிய ரகங்களில் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்து தேவையான மணலுடன் கலந்து சீராக விதைக்க வேண்டும். விதை மூலம் பரவும் நோயினை தடுக்க ஒரு கிலோ விதையுடன் 2கிராம் கார்பென்டசிம் அல்லது 4 கிராம் டிரைக்கோடெர்மாவிரிடி என்ற அளவில் கலந்து விதைக்க வேண்டும். விதைப்பதற்கு 24 மணி நேரத்துக்கு முன் விதை நேர்த்தி செய்ய வேண்டும். பயிர்களுக்கு இயற்கையாகவே தழைச்சத்து கிடைக்க ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன் ஒரு பொட்டலம் அசோஸ்பைரில்லம் மற்றும் ஒரு பொட்டலம் பாஸ்போ பாக்டீரியா ஆகியவற்றை ஆறிய அரிசி கஞ்சியுடன் கலந்து நிழலில் உலர வைத்து பின்பு விதைக்க வேண்டும். ஏக்கருக்கு அடியுரமாக 5 டன் தொழு உரம் இட்டு அதனுடன் தழை, மணி சாம்பல் சத்து தரவல்ல 20 கிலோ யூரியா, 31 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 9 கிலோ மூரியேட்ஆப் பொட்டாஸ் உரத்தினை அடியுரமாக இடவேண்டும். விதைத்த 15வது நாள் செடிக்கு செடி 15 செமீ இடைவெளி இருக்கும்படியும் 30வது நாளில் செடிக்கு செடி 30 செமீ இடைவெளி உள்ளவாறும் வைத்து மற்ற செடிகளை அகற்றி விட வேண்டும். செடிகளை கலைத்து விடும்போது வயலில் போதுமான ஈரம் இருப்பது நல்லது. எள் பயிரில் பயிர் கலைத்தல் ஒரு முக்கிய பணியாகும். இவ்வாறு செய்யாவிட்டால் மகசூல் கணிசமாக குறையும். கோடை மழையை பயன்படுத்தி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மானாவாரியில் எள் சாகுபடி செய்து அனைத்து தொழில் நுட்பங்களை கடைபிடித்து அதிக மகசூல் பெற்று பயன் பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**தோட்டக்கலை துறை மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி சுற்றுலா**

திருப்பரங்குன்றம் : தோட்டக்கலைத்துறை சார்பில் திருப்பரங்குன்றம், டி.கல்லு பட்டியை சேர்ந்த 150 விவசாயிகள் தோட்டக்கலை விவசாயம் குறித்து பயிற்சி பெற தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு சுற்றுலா புறப்பட்டனர்.

திருப்பரங்குன்றம் யூனியன் தலைவர் புஷ்பலதா சுற்றுப்பயணத்தை துவக்கி வைத்தார். துணை தலைவர் சிவபாக்கியம், திருப்பரங்குன்றம் தோட்டக்கலை அலுவலர்கள் முருகேசன், பாலகிருஷ்ணன், சலீம்ராஜ், சுருளீஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சுற்றுலா செல்லும் விவசாயிகள், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பயிரிட்டுள்ள, ஒட்டு மா, நெல்லி, முந்திரி, வீரிய ஒட்டு காய்கறிகள், சொட்டுநீர் பாசனத்தின்

நன்மைகள், அனைத்து தோட்டக் கலை பயிர்களுக்கும் நவீன சாகுபடி, தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை நேரடியாக பார்வையிட்டு பயிற்சி பெற உள்ளனர் என, திருப்பரங் குன்றம் தோட்டக்லை உதவி இயக்குனர் மோகன்குமார் தெரிவித்தார்.

**முட்டைக்கோழி விலை தொடர்ந்து ஏறுமுகம் : தமிழகத்தில் முட்டை விலை 260 காசு**

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை 260 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரே நாளில் முட்டை விலை 10 பைசா உயர்ந்துள்ளது. நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அடுத்து, 250 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை விலை 10 காசு உயர்த்தி 260 காசாக நிர்ணயிக்கப்பட்டது. கடந்த 5ம் தேதி முட்டை விலை 240 காசுகளாக இருந்தது. 7ம் தேதி 5 காசு உயர்ந்து 245 காசாகவும், 8ம் தேதி 5 காசு உயர்ந்து 250 காசாகவும் நிர்ணயிக்கப்பட்டது. நேற்று ஒரே நாளில் முட்டை விலை 10 காசு உயர்த்தி 260 காசுகளாக நிர்ணயித்திருப்பது பண்ணையாளர்களை மகிழ்ச்சியடைய செய்துள்ளது. நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை விபரம் வருமாறு: ஹைதராபாத் 223 காசு, விஜயவாடா, தனுகு 225 காசு, சென்னை 255 காசு, மைசூர் 250 காசு, பெங்களூர் 250 காசு, மும்பை 247 காசு, டில்லி 234 காசு, கோல்கத்தா 260 காசு. நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் முட்டைக்கோழி விலை 2 ரூபாய் உயர்த்தி 52 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் அதன் விலை 66 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. முட்டை மற்றும் முட்டைக்கோழி, கறிக்கோழி விலை தொடர்ந்து ஏறுமுகமாகவே உள்ளது.

**உ.பருப்பு, பாசி பருப்பு வரத்து குறைவால் விலை கிடுகிடு உயர்வு**

சேலம்: வடமாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு வரும் உளுந்தம் பருப்பு வரத்து திடீர் என சரிந்துள்ளதால், நேற்று உளுந்தம் பருப்பு, பாசி பருப்பின் விலையில் குவிண்டாலுக்கு 400 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டது. தமிழகத்தில் இந்த ஆண்டு உளுந்து விளைச்சல் எதிர்பார்த்த அளவு இல்லை. இந்நிலையில் மத்தியபிரதேசம், மஹாராஷ்டிரா மாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு வந்து கொண்டு இருந்த உளுந்தம் பருப்பு, பாசி பருப்பின் வரத்தில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது. சென்னை துறைமுகத்தில் பர்மா ரக உளுந்து வரத்து குறைந்துள்ளதன் எதிரொலியாக, சேலம் மார்க்கெட்டு வரும்

பர்மா ரக உளுந்தம் பருப்பின் வரத்தும் வழக்கத்தை விட குறைந்துள்ளது. சேலத்தில் உளுந்தம் பருப்பு, பாசி பருப்பின் விலையில் தொடர்ந்து உயர்வு ஏற்பட்டு வருகிறது. மொத்த விலையில் குவிண்டாலுக்கு 400 ரூபாய் உயர்த்தப்பட்டதன் எதிரொலியாக சில்லரை விலையில் கிலோவுக்கு அதிகபட்சமாக ஆறு ரூபாய் வரை அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது. கடந்த வாரம் சேலத்தில் குவிண்டால் 6, 700 விற்பனை செய்யப்பட்ட பர்மா பெருவெட்டு ரக உளுந்தம் பருப்பு நேற்று குவிண்டால் 7,100 ரூபாய்க்கும், நடுத்தர ரகம் குவிண்டால் 6,400 ரூபாய்க்கு விற்றது 6,800 ரூபாய்க்கும், சிறுவெட்டு என்றழைக்கப்படும் மூன்றாம் ரகம் குவிண்டால் 6,000 ரூபாய்க்கு விற்றது 6,300 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.

மொத்த விலையில் உளுந்தம் பருப்பின் விலையில் ஏற்பட்ட உயர்வை அடுத்து சில்லரை விலையில் கிலோ 72 ரூபாய்க்கு விற்ற உளுந்தம் பருப்பு நேற்று 76 ரூபாய் வரை விற்றது. உளுந்தம் பருப்பின் விலை ஏற்றத்தை அடுத்து பாசி பருப்பின் விலையில் குவிண்டாலுக்கு 400 ரூபாய் அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது. கடந்த வாரம் வரை பாசி பருப்பு குவிண்டால் 7,900 ரூபாய்க்கு விற்றது நேற்று 8,300 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. மொத்த விலையில் ஏற்பட்டுள்ள உயர்வை அடுத்து சில்லரை விலையில் பாசி பருப்பு கிலோ 90 ரூபாய்க்கு விற்றது 94 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. பாசி பருப்பு வரத்தில் தொடர்ந்து சரிவு ஏற்பட்டுள்ளதால், இதன் விலையில் மேலும் அதிகரிப்பு ஏற்பட்டு கிலோ 100 ரூபாய்க்கு விற்றாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்கின்றனர் வியாபாரிகள். உளுந்தம் பருப்பு, பாசி பருப்பின் விலையில் உயர்வு ஏற்பட்டுள்ள நிலையில், துவரம் பருப்பின் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை. நேற்றைய மார்க்கெட் நிலவரப்படி குவிண்டால் 7,100 ரூபாய்க்கும், சில்லரை விலையில் கிலோ 76 ரூபாய்க்கும் விற்கிறது. வடமாநிலங்களில் இருந்து சேலத்துக்கு வரும் உளுந்தம், பாசி பருப்பின் வரத்து தொடர்ந்து சரிந்து வரும் நிலையில் உள்ளூரில் விளைச்சல் எதிர்பார்த்த அளவு இல்லை என்பதால், இவற்றின் விலையில் மேலும் அதிகரிப்பு ஏற்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

**விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி மஞ்சள் விலை தொடர்ந்து ஏறுமுகம்**

---

ஆத்தூர்:  ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில் குவிண்டால் 16 ஆயிரத்து 330 ரூபாய் விலைக்கு விற்று சாதனை படைத்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஆத்தூர் அதன் சுற்றுவட்டார பகுதியில் கடந்தாண்டு நடவு செய்யப்பட்ட மஞ்சள் அறுவடை செய்து, வேக வைத்து பதப்படுத்திய சுத்தம் செய்யும் பணி நடந்து வருகிறது. கச்சிராபாளையம், அரியலூர், பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, உள்ளிட்ட பகுதிகளிலும் அறுவடை செய்த மஞ்சள் வேக வைத்து சுத்தம் செய்யப்படுகிறது மஞ்சள் சுத்தம் செய்து ஈரோடு, நாமக்கல் மாவட்டம் நாமகிரிபேட்டை, ஒழுங்குமுறை விற்பனை கூடம், ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், தனியார் மண்டிகளில் நடக்கும் ஏலத்தில் விவசாயிகள் விற்பனை செய்து வருகின்றனர்.

கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கடந்த மார்ச் மாதம் துவங்கிய முதல் ஏலத்தில் ஒரு குவிண்டால் மஞ்சள் 10ஆயிரத்து 789 ரூபாய்க்கு விற்றது.13ம் தேதி 12ஆயிரத்து 899 ரூபாய், 20ம் தேதி  14ஆயிரத்து 669 ரூபாய், 27ம் தேதி 13ஆயிரத்து 320 ரூபாய் என்று விற்பனையானது. ஏப்ரல் 3ம் தேதி ஒரு குவிண்டால் 13ஆயிரத்து 529 ரூபாய், 10ம் தேதி  13ஆயிரத்து 677 ரூபாய், 17ம் தேதி 13ஆயிரத்து860 ரூபாய், 24ம் தேதி 14ஆயிரத்து169 ரூபாய், மே 1ம் தேதி ஒரு  குவிண்டால் மஞ்சள் 15 ஆயிரத்து 959 விற்று சாதனை படைத்தது.  நேற்று முன்தினம் 8ம் தேதி நடந்த ஏலத்தில் விரலி மஞ்சள் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 16 ஆயிரத்து 330 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக 15 ஆயிரத்து 560 ரூபாய்க்கும், உருண்டை மஞ்சள் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 15 ஆயிரத்து 819 ரூபாய், குறைந்த பட்சமாக 15 ஆயிரத்து 229 ரூபாய், பனங்காலி மஞ்சள் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 13 ஆயிரத்து 519 ரூபாய், குறைந்த பட்சமாக 13 ஆயிரத்து 039 ரூபாய்க்கு ஏலம் போனது. 1,800 மூட்டைகள் கொண்ட 950 குவிண்டால் மஞ்சள் ஒரு கோடியே 70 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. தொடர்ந்து நடந்து வரும் மஞ்சள் ஏலத்தில் ஒரு குவிண்டால் 16ஆயிரத்து 330 ரூபாய்க்கு விற்று சாதனை படைத்துள்ளது. மஞ்சள் விலை தொடர்ந்து ஏறுமுகத்தில் இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**அரசு சலுகைகளை பெற தவிக்கும் விவசாயிகள்**

மயிலாடும்பாறை : மயிலாடும்பாறையில் உழவர் பாதுகாப்பு அட்டை கிடைக்காததால் அரசின் சலுகைகளை பெற முடியாமல் பொதுமக்கள் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர்.

க.மயிலை ஒன்றியம், மயிலாடும்பாறையில் ஐந்து ஆண்டுகளாக உழவர் அட்டை கேட்டு வருவாய்த்துறை அதிகாரிகளிடம் பொதுமக்கள் மனு கொடுத்து வருகின்றனர். சில நாட்களுக்கு முன் உழவர் பாதுகாப்பு அட்டை தருவதாக பொதுமக்களிடம் வருவாய்த்துறையினர் பணம் வசூலித்தனர். ஆனால் அட்டைகள் வழங்கப்படவில்லை. உழவர் பாதுகாப்பு அட்டை இல்லாததால் அரசின் சலுகைகளை பெற முடியாமல் அவதிப்பட்டு வருகின்றனர். அட்டை வழங்காத நபர்களுக்கு உழவர் பாதுகாப்பு அட்டை வழங்க வருவாய்த்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கோடை மழையில் உளுந்து சாகுபடி: அதிகாரி அட்வைஸ்**

மண்ணச்சநல்லூர்: கோடை மழையை பயன்படுத்தி, நஞ்சை தரிசில் உளுந்து சாகுபடி செய்து பயன்பெறுமாறு மண்ணச்சநல்லூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் (பொ) ரெங்கராசன் விவசாயிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.மண்ணச்சநல்லூர் வட்டாரத்தில் பெய்து வரும் கோடை மழையை பயன்படுத்தி நஞ்சை தரிசு நிலங்களிலும், தோட்டக்கால் பகுதியிலும் உளுந்து விதைப்பு செய்தால், நல்ல மகசூல் பெற்று பயனடைய முடியும். நடப்பு பருவத்தில் குறுகிய கால உளுந்து ரகமான உளுந்து டி 9 விதைப்பு செய்வதன் மூலம் ஏக்கருக்கு 600 முதல் 700 கிலோ வரை மகசூல் பெற்று குறைந்த செலவில் லாபம் பெற முடியும். இதன் மூலம் மண்ணின் வளம் அதிகரித்து, குறுவை பருவ நெல் சாகுபடியில் நல்ல மகசூல் பெற முடியும்.

ஓர் ஏக்கருக்கு உளுந்து டி 9 விதை 10 கிலோவை டி.விரிடி உயிரியல் பூசன கொல்லி மருந்து 40 கிராமுடன், ரைசோபியம், பாஸ்போ பாக்டீரியா ஒரு பொட்டலம் வீதம் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். அடியுரமாக ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, சூப்பர் பாஸ்பேட் 125 கிலோ இட வேண்டும். தேவையான உளுந்து விதைகள் வேளாண் விரிவாக்க மையத்தில் மான்ய விலையில் விநியோகம் செய்யப்படுகிறது. உயிர் உரம் டி.விரிடியும் தேவையான அளவு இருப்பு உள்ளது. இதனை பயன்படுத்தி உளுந்து சாகுபடி செய்து விவசாயிகள் அதிக மகசூலை பெறலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**மண்புழு உர உற்பத்தி கூடத்தில் வேளாண் அதிகாரி ஆய்வு**

தென்காசி:வாசுதேவநல்லூர் பகுதியில் உள்ள மண்புழு உர உற்பத்தி கூடத்தில் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் தேவசகாயம் ஆய்வு செய்தார்.வாசுதேவநல்லூர் வட்டாரத்தில் கடந்த 2009-10ம் நிதியாண்டில் 50 சத மானியத்தில் மண்புழு உரம் உற்பத்தி செய்வதிற்குரிய குடில்கள் அமைக்கப்பட்டன. புளியங்குடி ரெங்கராஜ் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மண்புழு உர உற்பத்தி கூடாரத்தை மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் தேவசகாயம் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அவர் மண்புழு உர உற்பத்தியை பெருக்கிட மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து விளக்கினார்.ஆய்வின் போது வாசுதேவநல்லூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள், துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன், உதவி வேளாண்மை அலுவலர் அண்ணாதுரை உடனிருந்தனர். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் சுபாஸ் சந்திரபோஸ் செய்திருந்தார்.

**ரகம்வாரியாக சுத்திகரிக்க விதை சுத்தி நிலைய அதிபர்களுக்கு அறிவுறுத்தல்**

திருநெல்வேலி:சுத்திகரித்து எடுக்கும் வயல் தர நெல் விதைகளை ரகம்வாரியாக சுத்திப்பணிக்கு எடுக்க நெல்லை மற்றும் தூத்துக்குடி விதைச் சுத்தி நிலைய உரிமையாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.தற்சமயம் நெல் அறுவடையாகி விதை சுத்திகரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறு சுத்தம் செய்த வயல் தர விதைகளை ரகம்வாரியாக சுத்திப்பணிக்கு எடுக்க வேண்டும். விதை சுத்தி உரிமையாளர்கள் தங்களிடம் உள்ள பல்வேறு ரகங்களில் ஒரு ரகத்தின் மொத்த விதைகளையும் சுத்தி செய்த பின், அடுத்த ரகத்தினை சுத்திப்பணிக்கு எடுப்பதால் பிற ரகங்கள் கலவாமல் உறுதி செய்ய முடியும். ஆகவே பிற ரக விதைகள் கலவாமல் இருக்க சுத்திப் பணிகளை கவனமாக மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**நடமாடும் மண் ஆய்வகம் மூலம் பரிசோதனை: 353 விவசாயிகளுக்கு விபர அட்டை வழங்கல்**

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் நடமாடும் மண் ஆய்வகம் மூலம் 353 விவசாயிகளின் நிலங்களில் மண் மாதிரி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

திருத்துறைப்பூண்டியில் நடமாடும் மண் ஆய்வகத்தின் மூலம் மண் பரிசோதனை வேளாண் அலுவலர் தவமணி, தெய்வேந்திரன் தலைமையில் நடந்தது. வேளாண் உதவி அலுவலர்கள் சாமிநாதன், சிவகுமார், மகேஷ், ஜோதிகணேசன், செந்தில் ஆகியோர் இரண்டு குழுக்களாக பிரிந்து, விவசாயிகளின் சாகுபடி வயல்கள், வழிமுனைக்கேணிகளிலும் ஆய்வு மேற்கொண்டனர்.

மொத்தம் 353 விவசாயிகளின் நிலத்தில் மண் மாதிரிகளும், 16 விவசாயிகளுக்கு பாசன தண்ணீர் மாதிரிகளும் சேகரித்தனர். ஆய்வு முடிவுகள் மண் வள அட்டையில், மண்ணின் கார, அமில, நிலத்தன்மையும், தளை, மணி, சாம்பல் சத்துக்கள் அளவும் பரிந்துரைக்கப்படும். ரசாயன உரங்களும் குறிப்பிட்டு அட்டைகள் வழங்கப்பட்டன. இம்மண் வள அட்டையை வழங்கி பேசிய வேளாண் இணை இயக்குனர் அன்பழகன், "வேளாண் துறை பரிந்துரைப்படி ரசாயன உரங்களை பயன்படுத்தி சாகுபடி செலவை குறைக்க வேண்டும். அதிக மகசூலை பெறலாம்," என்றார்.

பாசன தண்ணீர் மாதிரி முடிவுகளை விவசாயிகளுக்கு வழங்கி பேசிய கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) கபிலன், "திருத்துறைப்பூண்டி பகுதியில் ஆழ் குழாய் கிணறுகள் அமைத்திட இயலாது. ஏனெனில் கடல் நீர் உள்ளே புகும் அபாயம் உள்ளது. மேலும், மேல் மட்டத்தில் உள்ள வடிமுனைக்கிணறு பாசன தண்ணீரிலும் காரத்தன்மை உள்ளது. எனவே, சிறு குட்டைகள் வெட்டி, அதில் நீரை ஒரு நாள் நிறுத்தி மறுதினம் பாசனம் செய்யும் வயல்களில் ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம் தெளிக்க வேண்டும்," என்றார். திருத்துறைப்பூண்டி வட்டாரம் விளக்குடி, ஆலத்தம்பாடி, கட்டிமேடு ஆகிய பஞ்சாயத்துக்களில் நடந்த மண் ஆய்வு முகாமில், பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் கவுன்சிலர்கள், விவசாயிகள் பங்கேற்றனர்.

**தீயில் எரிந்து கோழிப்பண்ணை சாம்பல்**

திருத்தணி : திருத்தணி அருகே திடீரென ஏற்பட்ட மின்கசிவால், 10  லட்ச ரூபாய் மதிப்புள்ள கோழிப் பண்ணை மற்றும் தீவனம் தீயில் எரிந்து சாம்பலானது. திருத்தணி அடுத்த நத்தம் கிராமத்தை சேர்ந்தவர் சீனிவாசன்(56). இச்வரது இரண்டு ஏக்கர்

விவசாய நிலத்தில் மூன்று கோழிப்பண்ணை அமைத்து இறைச்சி கோழிகளை வளர்த்து வந்தார். தற்போது கோடை காலம் என்பதாலும், கோழிப்பண்ணையை மேலும் விரிவுபடுத்துவதற்காகவும் கடந்த சில நாட்களாக கோழிகளை விற்று விட்டார். கோழிக்கான தீவனம் மற்றும் இயந்திர பாகங்கள் என 10 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களை மட்டும் வைத்திருந்தார். நேற்றுமுன்தினம் இரவு திடீரென மின்கசிவு ஏற்பட்டு முதல் கோழிப் பண்ணை தீப்பிடித்து எரிந்தது. காற்று வீசியதால் அருகில் உள்ள இரு கோழிப்பண்ணை களுக்கும் தீப்பரவியது. தகவலறிந்த சீனிவாசன் மற்றும் கிராம பொதுமக்கள்  தீயணைப்பு படையினருக்கு தகவல் கொடுத்தனர். தீயணைப்பு வீரர்கள் ஒரு மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். இதற்குள் மூன்று கோழிப்பண்ணைகளும், அதில் வைத்திருந்த இயந்திரங்கள் மற்றும் கோழித் தீவனம் உட்பட அனைத்து பொருட்கள் முழுவதும் எரிந்து சாம்பல் ஆனது.  போலீசார் விசாரித்து வருகின்றனர்.

**கரும்பு செயல்விளக்க கூட்டம்**

ஆற்காடு: வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, ஆற்காடு கோட்டத்திற்கு உட்பட்ட கரும்பு விவசாயிகளுக்கான செயல் விளக்க கூட்டம் நடந்தது. ஆற்காடு அடுத்த உப்புப்பேட்டை கிராமத்திலுள்ள கருணாகரன் நிலத்தில் நடந்த செயல்விளக்க கூட்டத்திற்கு தலைமை வகித்தார். கோட்ட களப்பணியாளர்கள் மனோகரன், பாபு, சூரியகுமார், கணேசன் முன்னிலை வகித்தனர். கோட்ட அலுவலர் மதிவர்மன் வரவேற்றார். தலைமை அலுவலர் ராஜேந்திரன் பேசுகையில், கோடை வறட்சியில் கரும்பை பாதுகாக்க, பயிரில் ஏக்கருக்கு தலா இரண்டரை கிலோ பொட்டாஷ், யூரியா ஆகியவைகளை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து , அதனை வடிகட்டி இலைகள் நன்றாக நனையும் படி தெளிக்க வேண்டும். இப்படி தெளிப்பதால் இலை துளைகள் வழியாக நீர் ஆவியாகி ஆகி வெளியேறுவது தடுக்கப்பட்டு கரும்பு வறட்சியை தாங்கி வளரும் என்று விளக்கி பேசினார்.நிகழ்ச்சியில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு அதிகாரிகளிடம் தங்களின் சந்தேகங்களை விளக்கம் கேட்டனர்.

**தட்டுப்பாடுகளால் நெல் விவசாயிகள் தென்னைக்கு மாற்றம் : மாவட்டத்தில் குறைந்து வரும் நெல் சாகுபடி**

---

வத்திராயிருப்பு : தொழிலாளர், தண்ணீர் தட்டுப்பாடு, கூலி உயர்வு காரணமாக நெல் விவசாயத்தில் தேக்கநிலை காணப்படுவதால் விவசாயிகள் தென்னை சாகுபடிக்கு மாறி வருகின்றனர். இதனால் மாவட்டத்தில் நெல் சாகுபடி ஒவ்வொரு ஆண்டும் கணிசமாக குறைந்து வருகிறது.

ராஜபாளையம், சேத்தூர், தளவாய்புரம், ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு போன்ற பகுதிகளில் நெல் விவசாயம் பெருமளவு நடந்து வருகிறது. பொன்னி, டீலக்ஸ் வகைகள், மாவு வகை பயன்பாட்டிற்கான ஐ.ஆர். 20, பால்ஒட்டு, மிளகிஅரிசி போன்ற ரகங்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. இங்கு மகசூலாகும் நெல், மாவட்டத்தின் தேவையை பூர்த்தி செய்வதுடன் வட மாவட்டங்கள் வரை விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகிறது.

தட்டுப்பாடு: பல ஆண்டுகளாகவே சீசன் நேரங்களில் வறட்சி, தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது. நட்ட பயிர்களை காக்க வாடகைக்கு தண்ணீரை தேடி விவசாயிகள் ஒவ்வொரு முறையும் படாதபாடு படவேண்டியுள்ளது. பல நேரங்களில் ஆயிரக்கணக்கில் செலவழித்து நடப்பட்ட நாற்றுகள் கருகி விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்திக்க நேரிடுகிறது.

இது ஒருபுறமிருக்க வேலை உறுதியளிப்பு திட்டத்தாலும் விவசாய தொழிலாளர்களுக்கு கடும் பற்றாக்குறை உள்ளது. கிடைக்கும் தொழிலாளர்களை அதிக கூலி கொடுத்தே பணியமர்த்த வேண்டியுள்ளது. இது தவிர உரத் தட்டுப்பாடு, நோய் தாக்குதல் என அடுத்தடுத்த பிரச்னைகளை நெல் விவசாயிகள் சந்திக்க நேரிடுகிறது.

தென்னைக்கு மாற்றம்: இதிலிருந்து விடுபட விவசாயிகள் படிப்படியாக தென்னை விவசாயத்திற்கு மாறிவருகின்றனர். இதில் வறட்சி, உரத்தட்டுப்பாடு போன்ற பிரச்னைகள் இல்லை. உரமோ, தண்ணீரோ எதுவானாலும் கிடைக்கும்போது உபயோகித்துக்கொள்ளலாம். நோய் தாக்குதல்களால் அதிக பாதிப்புகள் கிடையாது. தொழிலாளர்களும் அதிகம் தேவையில்லை.

குறையும் நெல் சாகுபடி: இப்படி பல வசதிகள் இருப்பதால் விவசாயிகள் தாங்கள் நெல்வயல்களில் ஒவ்வொரு பகுதியை ஒதுக்கியும், ஒருசிலர் நெல்லுக்கு மத்தியில் ஊடுபயிரைப்போல் தென்னங்கன்றுகளை நடவு செய்தும் வருகின்றனர்.

விவசாயிகளின் இந்த மாற்றத்தால் இப்பகுதிகளில் சுமார் 40 ஆயிரம் ஏக்கர் வரை நடந்து வந்த நெல் சாகுபடி கடந்த 10 ஆண்டுகளில் படிப்படியாக குறைந்து தற்போது 25 ஆயிரம் ஏக்கருக்கும் குறைவாகவே நடந்து வருகிறது.